Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

JUN 2004

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளிநாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
T.P -021-222-7310
(சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 25 (14.06.2004) திங்கட்கிழமை இதழ் :256

## புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம்
# எதிர்ப்புப் போராட்டம் நடத்த தயாராகின்றது ஜே.வி.பி.!

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கு தன்னாட்சி அதிகாரத்தை விடுதலைப் புலிகளிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்க முன்வருவாரானால், அதற்கு எதிராக நாடளாவிய ரீதியில், போராட்டங்களை முன்னெடுக்க தேசப்பற்று தேசிய முன்னணி என்ற பெயரில் ஜே.வி.பி. ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.**

**இதனடிப்படையில், எதிர்வரும் வாரம் முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு சுவரொட்டிகளை ஒட்டுவதற்கும் தேசப்பற்று தேசிய முன்னணி நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.**

நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், இடைக்கால தன்னாட்சி தொடர்பாக புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாக கூறியிருந்தார்.

இந்த அறிவிப்பை ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் எதிர்த்திருந்தன. இந்தநிலையில், ஜனாதிபதி சந்திரிகா இடைக்கால தன்னாட்சியை, தமது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தியே வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கான வலியுறுத்தல் ஒன்றை ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியை சந்தித்த போது, ஜனாதிபதி - ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியைக் கலைப்பதற்கும், அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதற்கும் பயன்படுத்திய, நிறைவேற்று அதிகாரத்தை தமிழர்களின் தீர்வுக்காகப் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தியிருந்தது.

இதனை ஜனாதிபதியும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டதாகவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையிலேயே, தேசப்பற்று தேசிய முன்னணி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

தேசப்பற்று தேசிய முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள், ஜே.வி.பியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோரே போராட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் பலி!

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் கனகரத்தினம் வீதி, அரியாலைப் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் சூசைப்பிள்ளை சுவேந்திரன் (வயது 27) என்னும் இளம் குடும்பஸ்தரே மரணமடைந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக வீட்டின் முன் இருந்த மின்சாரக் கம்பத்தில் ஏறி மின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலி செல்லமுயன்ற 38 இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்கு புறப்படவிருந்த வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 38 தமிழ் இளைஞர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் மாத்தறை - வெலிகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

வெலிகம நகரில் இருந்து வெலிகம மீன்பிடித் துறைமுகத்தில் தரித்துநின்ற படகொன்றில் ஏறுவதற்கு இவர்கள் லொறி ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டபோதே, பொலிஸார் இவர்களைக் கைதுசெய்தனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் தலா 3 லட்சம் முதல் 4 லட்சம் ரூபா வரை செலுத்தியே இத்தாலிக்கு புறப்படவிருந்தனர். இவர்களை ஏற்றிச் செல்லவிருந்த படகும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

ஏற்கனவே நீர்கொழும்பு கடற்பகுதியின் ஊடாக இத்தாலி சென்ற சுமார் 400 சிங்கள இளைஞர்கள் சோமாலியாவில் தடுப்பு நிலையம் ஒன்றில் உணவுக்கு கூட கஷ்டமான நிலையில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## வடக்கு - கிழக்கில்
# உதவிப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் உயர்மட்ட மாநாடு

வடக்கு - கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டுவரும் சர்வதேச நிறுவனங்களின் உயர்மட்ட மாநாடு இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தலைமையில் இந்த மாநாடு இடம்பெறும்.

ஐக்கிய நாடுகள் சபை சார்ந்த அமைப்புக்கள், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளோடு வடக்கு - கிழக்கு மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள் ஆகியோரும் இதில்

# விடுதலைப் புலிகள் மீதான தடையுத்தரவு பொலிஸ் நிலையங்களில் பார்வைக்கு!

## தமிழக அரசு உத்தரவு

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடை குறித்த உத்தியோக பூர்வ வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கும் தமிழக அரசு, இதன் பிரதிகளை ஒவ்வொரு பொலிஸ நிலையத்திலும் பார்வைக்கு வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறது.

புலிகள் இயக்கம் ஏன் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதை

சையத் முனீர் ஹோதா வெளியிட்டிருக்கிறார்.

இந்த உத்தரவில் - விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இந்தியாவில் ஆதரவாளர்கள், அனுதாபிகள், முகவர்கள் இருக்கிறார்கள். அனைதது் தமிழர்களுக்காக தனிநாடு (தமிழீழம்) கோரும் விடுதலைப்

இந்தியாவின் ஆட்சிப் பகுதியிலிருந்து ஒரு பகுதியைப் பிரிக்கும் செயலை அனுமதிப்பது சட்ட விரோதமானது. விடுதலைப் புலிகளால் இலங்கையில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலையால் இந்த அமைப்பிற்கு தடைவிதிக்கப்படுகிறது.

இவர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தி சிலர் பிரிவினையைத்

## நிறுவனங்களின் உயர்மட்ட மாநாடு

வடக்கு - கிழக்கு பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டுவரும் சர்வதேச நிறுவனங்களின் உயர்மட்ட மாநாடு இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க தலைமையில் இந்த மாநாடு இடம்பெறும்.

ஐக்கிய நாடுகள் சபை சார்ந்த அமைப்புக்கள், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளோடு வடக்கு - கிழக்கு மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள் ஆகியோரும் இதில் கலந்துகொள்வார்கள்.

இந்த மாநாட்டில் புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ், வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜன் ஆகியோர் இந்த மாகாணங்களின் தற்போதைய நிலை பற்றி கூறவுள்ளனர்.

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடை குறித்த உத்தியோக பூர்வ வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கும் தமிழக அரசு, இதன் பிரதிகளை ஒவ்வொரு பொலிஸ நிலையத்திலும் பார்வைக்கு வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறது.

புலிகள் இயக்கம் ஏன் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதை விளக்கும் வகையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த உத்தரவை தமிழக அரசின் மாநில உள்துறை செயலாளர்

### தமிழக அரசு உத்தரவு

சையத் முனீர் ஹோதா வெளியிட்டிருக்கிறார்.

இந்த உத்தரவில் - விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இந்தியாவில் ஆதரவாளர்கள், அனுதாபிகள், முகவர்கள் இருக்கிறார்கள். அனைதது்த் தமிழர்களுக்காக தனிநாடு (தமிழீழம்) கோரும் விடுதலைப் புலிகளால் இந்தியாவின் இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படும்.

இந்தியாவின் ஆட்சிப் பகுதியிலிருந்து ஒரு பகுதியைப் பிரிக்கும் செயலை அனுமதிப்பது சட்ட விரோதமானது. விடுதலைப் புலிகளால் இலங்கையில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலையால் இந்த அமைப்பிற்கு தடைவிதிக்கப்படுகிறது.

இவர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தி சிலர் பிரிவினையைத் தூண்டுகிறார்கள். இவர்களில் பலருக்கு குற்றவியல் வழக்குகளில்

(12 ஆம் பக்கம் பார்க்க)



குகுலேகங்கவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஐ.நா.சமாதான உதவி நடவடிக்கை பயிற்சி நிலையத்தில் பன்னாட்டு பிளட்டூன் ஒத்திகை நிகழ்வில் மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோருடன் அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கட்டளை அதிகாரி லெப்.ஜெனரல் ஜேம்ஸ் எல் கம்பெல் உரையாடுகிறார்.

# புலிகளின் கடற்பயணத்தைத் தடுக்க கடற்படைக்கு தயா சந்தகிரி உத்தரவு!

(கொழும்பு)

கடற்படையினரின் எச்சரிக்கையை மீறி விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கிழக்குக்கான கடற்பயணத்தை மேற்கொண்டால், குறுக்கிட்டுத் தடுக்கும்படி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கடற்படையினருக்கு உத்தரவிட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடற்புலிகள் - கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவிலிருந்து கிழக்குக்கான கடற்பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர். இதற்குக் கடற்படைத் தளபதி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

இதனால், கடற்புலிகள் தமது பயணத்தைக் கைவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு விடுதலைப் புலிகள் விடுத்த கோரிகையில் -

90 புலிகளை சனிக்கிழமை மூன்று படகுகளில் முல்லைத்தீவிலிருந்து கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஏற்றிச்செல்வதற்கும், 15 ஆம் திகதி வரை படகுகள் கிழக்கில் தரித்துநின்று 20 புலிகளுடன் முல்லைத்தீவுக்குத் திரும்பி வருவதற்கும் அனுமதி கோரியிருந்தனர்.

ஆனால், கிழக்கிற்குச் செல்லும் படகுகளும் அதேயளவு போராளிகளும் 24 மணிநேரத்திற்குள் மீளத் திரும்ப வேண்டும் எனக் கடற்படையினர் தெரிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் கடற்பயணத்தை மேற்கொள்வதற்கு எந்தக் காரணமும் இல்லையென கடற்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - விடுதலைப் புலிகள் கடற்பயணத்தை மேற்கொண்டால், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, புலிகள் தமது கடற்பயணத் திட்டத்தைக் கைவிட்டிருப்பதாகவும் -

இந்தக் கடற்பயணம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி/2489)
EXPOAIR
Your friend in the skies...

# வியாழக்கிழமை நடைபெறும் பேரணியில் அனைத்து மக்களும் கலந்து சிறப்பியுங்கள்

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசின் அசமந்தப் போக்கைக் கண்டிக்கும் வகையிலான பேரணியில் அனைவரும் அணிதிரளுமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அரசின் தொடர்ச்சியான அசமந்தப் போக்கைக் கண்டித்து எதிர்வரும் வியாழக்கிழமையன்று இடம்பெறவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் அனைத்து மக்களையும் உணர்வெழுச்சியுடன் பங்குகொள்ளவருமாறு அழைக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி இன்று 28 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்கள் வாழ்க்கையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இன்று பதவியில் இருக்கும் சந்திரிகா தலைமையிலான அரசு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதை விடுத்து போரின்மீது கவனம் செலுத்துகின்றது.

1994 இல் இதே சந்திரிகா அரசு பதவிக்கு வந்தபோது போரின் மூலம சமாதானம் என்ற கோசத்தை முன்வைத்து எம் மக்களைக் கொன்றொழித்தது. அந்தக் காலத்தில் எம் மக்கள் சந்தித்த இழப்புக்கள் ஏராளம். இன்று ஜே.வி.பியுடன் இணைந்து ஆட்சியமைத்த சந்திரிகா அரசு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தாமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது. உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் பெருமளவு நிலங்கள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ளன. நிலங்களை இழந்த பொதுமக்கள் இன்றுவரை அகதி வாழ்க்கை வாழும் கொடூரம், இத்தனைக்கும் மேலாக இடம்பெயர்ந்த மக்களின் நிவாரண வெட்டு, என ஏராளமான இடம்பெயர்ந்த குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக இன்றும் எத்தனையோ பாடசாலைகள் இராணுவ முகாம்களாக உள்ளன. அல்லது பாடசாலைக்கருகில் இராணுவம் இருப்பதாலும் இராணுவ நடமாட்டத்தாலும், தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, எமது மண்ணை ஆக்கிரமித்து இருக்கும் இராணுவம் எமது மக்கள் மீளக் குடியமரவும், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும் வசதியாக உடனடியாக எமது மண்ணை விட்டு வெளியேறவேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றுபட்டுக் குரல கொடுப்போம்.

எமது மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் எமது தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தியிருக்கிறார்கள். எமது ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார அமைப்பை சந்திரிகா அரசு உடனடியாக வழங்க வேண்டும். அன்றாடப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும்.

இந்த நிலையில் இன்று எமது மலையகத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். திட்டமிட்ட ரீதியில் அவர்கள் மீது ஏவப்படும் வன்முறைகளால், பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அச்சமான சூழலில் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், இன்று கிழக்கில் இடம்பெறும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மீதான படுகொலைகளும் சந்திரிகா அரசின் திட்டமிட்ட இன அழிப்ப நடவடிக்கையே ஆகும். தமிழ்த் தேசியத்திற்காகப் பாடுபட்ட கல்விமான்கள், பத்திரிகையாளர்கள், தேசியப் பற்றாளர்கள் திட்டமிட்டுக் கொல்லப்படுகின்றனர்.

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், சில தேசவிரோதிகளும் இணைந்து தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மீது மேற்கொள்ளும் இந்த வன்முறைகளை நாம் கண்டிக்கின்றோம்.

எனவே, மீள் குடியேற்றம், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தல், மலையக மக்கள் மீதான வன்முறைகள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மீதான படுகொலைகள் என்பவற்றைக் கண்டித்து மேற்கொள்ளப்படவுள்ள மாபெரும் கண்டனப் பேரணியில் அனைத்து மக்களும் கலந்து கொண்டு எமது எதிர்ப்பைச் சர்வதேசத்திற்கும், இலங்கை அரசிற்கும் வெளிப்படுத்துவோம் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# டானியலின் எழுத்துக்கள் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர்கலாசாலை சமூகத்தின் ஆதரவுடன் கலாநிதி செ.திருநாவுக்கரசு எழுதிய டானியலின் எழுத்துக்கள் எனும் நூல் வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 3.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

கலாசாலையின் ரதிலக்ஸ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு இளைப்பாறிய கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் எஸ்.நடராஜா தலைமை தாங்கவுள்ளார்.

தொடக்கவுரையை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் நிகழ்த்தவுள்ளார். வாழ்துரைகளை பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் கலாநிதி க.சொக்கலிங்கம், பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதலானோர் நிகழ்த்தவுள்ளனர். வெளியீட்டுரையை கந்தையா நடேசன் நிகழ்த்தவுள்ளார். ஆய்வுரையை கலாநிதி க.குணராசாவும், நன்றியுரையை இ.பேரின்பநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைச் சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் புத்தக வெளியீட்டு விழாவிற்கு ஆர்வமுள்ள அனைவரையும் வருகை தருமாறு கலாசாலை ஆசிரிய மாணவர்கள் கேட்டுள்ளனர்.

# வடக்கு - கிழக்கில் இயங்கிவந்த 156 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படும் 156 பாடசாலைகள் கடந்த காலத்தில் மூடப்பட்டுள்ளன. அத்துடன் 147 பாடசாலைகள் இடம்பெயர்ந்து இயங்குகின்றன என, கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இவ்வாறு மூடப்பட்டுள்ள 156 பாடசாலைகளையும் மீள இயங்க வைப்பதற்கு கல்வி அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல இடம்பெயர்ந்து இயங்கும் 147 பாடசாலைகளையும் சொந்த இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

இவற்றுக்கான நடவடிக்கைகள் யாவும் வட - கிழக்கு மாகாண சமுதாய மீள் கட்டமைப்பு நிறுவனமான நிகொட் அமைப்பின் உதவியைப் பெற்று உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவுள்ளதாகவும் கல்வி அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

# பஸ் போக்குவரத்தை நடத்தக்கோரி மனு கையளிப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி - வேலணை ஊடாக பஸ் போக்குவரத்தை நடத்துமாறு கோரி உரியவர்களிடம் மனு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மண்கும்பான் கிராம புனர்வாழ்வுக் கழகத் தலைவர் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டிலிருந்து அல்லைப்பிட்டி - வேலணை வீதி சீரின்மையால் பஸ் போக்குவரத்து இடம்பெறவில்லை. வீதியைப் புனரமைத்து பஸ் போக்குவரத்தினை மேற்கொள்ளுமாறு அல்லைப்பிட்டி, மண்கும்பான ஆகிய இடங்களிலுள்ள மக்கள் கலந்துரையாடி மனு அனுப்பத் தீர்மானித்துள்ளனர்.

யாழ். நகரிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ள இந்த பிரதேசத்திற்கு பஸ் போக்குவரத்தின்மையால் அல்லைப்பிட்டிச் சந்திவரை 3 கிலோமீற்றர் நடந்துவந்து, பஸ் போக்குவரத்தை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

# காணாமற்போனோர் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்று நேற்றைய தினம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் அ.தாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. இதன்படி காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் புதிய தலைவராக செ.இன்பராணியும் உப தலைவராக காசிப்பிள்ளை யோகேஸ்வரனும், செயலாளராக துரைசிங்கம் கமலநாயகியும், உப செயலாளராக கந்தையா நாகரட்ணமும், பொருளாளராக விவேகானந்தன் பிறேமலதா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் அரசின் அசண்டையீனமான செயற்பாட்டிற்கு எதிராக செயற்படுவதுடன் காணாமற் போனவர்களைத் தேடும் பணிகளை முடுக்கிவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஆன்மீகப் பெருவிழாவும் சான்றிதழ் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கல்யாண மண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணியளவில் ஆன்மீகப் பெருவிழா ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யோகாசனப் பயிற்சியில் கலந்துகொண்ட தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளது.

இந்தச் சான்றிதழ்களை ஸ்ரீ இராமகிருஸ்ண விஜயம் ஆன்மீக பண்பாட்டு இதழின் ஆசிரியர் சுவாமி விமூர்த்தானந்த மகராஜ் வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொறியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன!

கொழும்பு உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில், உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு உரிய பெறுபேறுகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பாடநெறியானது முழுநேர ஆங்கில மொழியிலான மூன்று வருட கற்கை நெறியையும், ஆறு மாதகால வெளிக்களப் பயிற்சி நெறியையும் கொண்டது. இந்தக் கற்கை நெறியானது உத்திரனியல், மின்னியல், இயந்திரவியல், குடிசார் இயந்திரவியல் போன்ற விசேட பிரிவுகளைக் கொண்டது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்குப் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2003 ஆம் ஆண்டு பழைய பாடத்திட்டமாயின் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், 2003 இற்கு முன் புதிய பாடத்திட்டமாயின் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தியும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தலும் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியில் விண்ணப்பதாரி 23 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப திகதி 09.07.2004 ஆகும். இது தொடர்பான மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தின் மாதிரியையும் 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் பார்வையிடலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி (றில்ஸ்)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00
(சி-2622)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜீன், ரம்பா, ஆனந்தராஜ் நடித்த
அடிமைச் சங்கிலி
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
INTREPID
(சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து

காட்சிநேரம்:-10.30, 2.30,6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

## சூடுபிடித்துள்ள றம்புட்டான் வியாபாரம்

யாழ். நகரப் பகுதியில் றம்புட்டான் வியாபாரம் அமோகமாக இடம்பெற்று வருவதனைக் காண முடிகின்றது.

தென்னிலங்கையிலிருந்து பெருமளவிற்கு லொறிகளில் கொண்டு வரப்பட்டுள்ள றம்புட்டான் பழங்கள் ஒன்று 1.00 ரூபா முதல் 5.00 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. இதேபோல் வன்னிப் பகுதியிலும் விற்பனை சூடுபிடித்துள்ளது.

மெகா
புலமைப்பரிசில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகள் ஆரம்பம்
விரையுங்கள் !
ASIAN COMPUTERS
யாழ்ப்பாணம்-சுன்னாகம்-நெல்லியடி

# இலங்கையில் உள்ள சிறைகளில் எமது உறவுகளைத் தேடவுள்ளோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் காணாமற் போனவர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் இலங்கையிலுள்ள சகல சிறைச்சாலைகளுக்கும் விஜயம் மேற்கொண்டு பார்வையிடவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்தார்.

காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கப் பொதுக்கூட்டம் நேற்று யாழ். கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ். குடாநாட்டில் தமது உறவுகளை, பிள்ளைகளை, தாய், தந்தையரை, சகோதரங்களை இழந்து எமது உறவுகள் படும் துன்பங்கள் எமக்கு நன்கு தெரியும். உறவுகளை இழந்த உங்களின் உள்ளம் புண்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இவர்களுக்கு சிங்கள தேசம் இதுவரை ஆக்கமுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. நாம் அண்மைக்காலங்களில் சில சிறைச்சாலைகளுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிட்டுள்ளோம்.

காணாமற் போனவர்களின் பெயர், நிலை தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். அத்துடன் இலங்கையில் உள்ள பல சிறைச்சாலைகளுக்கும் சென்று எமது உறவுகளைத் தேடும் பணிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எமது மக்கள் பலமுறை ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். நாம் எமது கருத்துக்களையும் காணாமற்போனோர் தொடர்பான நிலைப்பாட்டையும் இனிவரும் காலங்களில் அரசுடன் பேசவிருக்கிறோம். முக்கிய கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளோம்.

காணாமற்போனோர் தொடர்பாக இறுதித் தீர்வு ஒன்று வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். இப்படியே காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் இருந்துகொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அவர்களுக்குச் சரியான தீர்வு கிடைக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்ற 'விடுதலை' நூல் அறிமுக விழாவில முதற்பிரதியை கந்தசாமி ஐயரிடமிருந்து - வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோராதலிங்கம் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# தமது படைப்பிரிவைப் பலப்படுத்துவதற்காகவே அரசு போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டது!

## கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை

(கிளிநொச்சி)

இலங்கை அரசு போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டமையானது தமது படைப்பிரிவை பலப்படுத்துவதற்காகவே என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

கடற்புலிகளின் முதலாவது தாக்குதல் தளபதி லெப்.கேணல் சார்ள்ஸின் நினைவாக கடற்புலிகளின் சார்ள்ஸ் படையணியின் படைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள சார்ள்ஸ் நினைவு மாவீரர் மண்டப திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தென்னிலங்கை மக்கள் அனுபவிக்கின்ற பொருளாதார வசதிகளை தமிழர் தாயகத்தில் வாழ்ந்து வருகின்ற எமது மக்கள் போர்நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு, இரண்டரை ஆண்டுகளைக் கடந்த நிலையிலும் அனுபவிக்க முடியவில்லை.

30 ஆண்டுகளுக்கு முன்னர் என்ன வகையிலான கடற்தொழில் உத்திகளை தமிழ்மக்கள் பயன்படுத்தினார்களோ, அதே உத்திகளையே இன்றும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

ஆனால், தென்னிலங்கை மீனவர்கள் மாதக்கணக்கில் கடலிலேயே தங்கிநின்று நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தலில் ஈடுபடுவதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகளிலும் அவ்வாறான வசதிகளை ஏற்படுத்த, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை ஒப்படைக்கப்படல்வேண்டும். இடைக்கால நிர்வாக சபை ஒப்படைக்கப்படாதுவிடின் தமிழ்மக்களின் வாழ்வில் இயல்பு வாழ்வை ஏற்படுத்த முடியாது.

தீச்சுவாலை முறியடிப்புச் சமரை தொடர்ந்து போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்படாதுவிட்டிருந்தால், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இலக்கின் பாதிக்கு மேற்பட்ட பகுதியினை எட்டியிருப்பர் என்பதை எவரும் தடுத்திருக்க முடியாது.

போர்நிறுத்த உடன்பாட்டை அரசு கைச்சாத்திட்டதன் நோக்கம் தமது படைப்பிரிவை பலப்படுத்தவே போர்நிறுத்த காலத்தில் பல்வேறு நாடுகளினதும், படைக்கலங்கள், துறைமுகங்களுக்கு வந்துசென்றமை, ரணில் அரசுக் காலத்தில் அமெரிக்காவின கப்பல் கொள்வனவு தொடர்பாக அந்த நாட்டு அரசுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட்டமை, சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்ததும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு அன்று அந்தக் கப்பலைப் பார்வையிட்டமை, முப்படைத் தளபதியாக முன்னர் கடற்படைத் தளபதியாக கடமையாற்றிய தயா சந்தகிரி நியமிக்கப்பட்டமை போன்ற விடயங்களை கேணல் சூசை சுட்டிக்காட்டினார்.



கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் ஏற்றிவைத்தார். கடற்புலிகளின் கொடியினை கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன் ஏற்றினார். ஈகைச்சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான தியாகன் ஏற்றினார்.

சார்ள்ஸ் நினைவு மண்டபத்தினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை திறந்து வைத்தார். மண்டபத்தின் பெயர்ப் பலகையினை கடற்புலிகளின் மகளிர் சிறப்புத் தளபதி விடுதலை திரை நீக்கம் செய்து வைத்தார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணையால் பத்து எம்.பிக்கள் பதவியிழக்கலாம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக 118 எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து சமர்ப்பிக்கவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையையடுத்து, அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேர் தமது பதவிகளை இழக்க நேரிடலாமென தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்கியமை, நாடாளுமன்றின் செங்கோலைத் திருடியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபாநாயகர் லொக்கு பண்டாரவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் அரசதரப்பு 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் குற்றவாளிகளாக இனங்காணப்படும் பட்சத்தில் அவர்களின் நாடாளுமன்றப் பதவிகள் பறிபோகலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

# நாடாளுமன்ற விவாதங்களை ஐ.தே.கவே குழப்புகின்றதாம்!

## ஜே.வி.பி கூறுகிறது

நாடாளுமன்ற விவாதங்களைக் குழப்பும் வகையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நடந்துகொள்வதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி விடுத்த அறிக்கையில் -

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற விவாதத்தை ஐக்கிய தேசியக் கட்சியே குழப்புவதற்கு காரணமாக இருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத தின் கௌரவத்தைப் பாதிக்கச்செய்யும் நோக்குடனேயே இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டது.

வண.அக்மீமன தயாரத்ன தேரரைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் நற்பெயருக்குக் களங்களம் ஏற்படுத்த ஐ.தே.முன்னணி முயற்சி செய்துவருகிறது.

அக்மீமன தயாரத்ன தேரரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்க நீதிமன்றம் தடைவிதித்திருந்தபோது, அவருக்கு நாடாளுமன்றம் வர எந்த உரிமையும் கிடையாது.

ஆனால், தயாரத்ன தேரர் நீதிமன்ற உத்தரவை அவமதித்து சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமை ஒரு கெட்ட உதாரணமாகிவிட்டது.

இப்போது நாடாளுமன்றம் ஒரு வன்முறைக்குரிய இடமாகிவிட்டதெனவும் ஜே.வி.பி விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# புலிகளை ஏக பிரதிநிதிகளாக அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது

## ஜாதிக ஹெல உறுமய வற்புறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தவேண்டிய தேவை இல்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான வண அத்துரலியே ரத்தினதேரர் இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசும்போது-

விடுதலைப் புலிகளை தமிழ் மகளின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளுவதன் மூலம் ஏனைய தமிழ் அரசியற் கட்சிகளின், குழுக்களின் கருத்துக்கள் முடக்கப்படும் நிலை உருவாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாகாணசபைத் தேர்தல்:

# தபால் வாக்களிப்பு திகதிகள் அறிவிப்பு!

ஆறு மாகாண சபைகளுக்கு நடைபெறவுள்ள தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் இடம பெறும் என்று தேர்தல் ஆணையாளா தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

தபால் மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான வாக்குச்சீட்டுக்கள், உறுதிப்படுத்தும் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தபால்மூலம் இவை நேரடியாக குறித்த அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்.

உறுதிப்படுத்தும் அதிகாரிகளே தபால வாக்குச்சீட்டுக்களுக்கும் வாககாளர் அட்டைகளுக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருப்பார்கள் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

## மாகாணசபைத் தேர்தலுக்காக

# வாகனங்கள் மூலம் விளம்பரம் செய்வோருக்கு எதிராக கடும் சட்ட நடவழிக்கை எடுக்கப்படும்!

## தேர்தல் திணைக்களம் தீர்மானம்

மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு வாகனங்கள்மூலம் விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தேர்தலுக்கான பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக பிரதிப் பொலிஸமா அதிபர் காமினி நவரத்ன தெரிவிக்கையில் -

வாகனங்களில் விளம்பரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களை வாகனத்துடன் சேர்த்துக் கைது செய்வதற்கு பொலிஸார் விசேட திட்டமொன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்படுபவர்கள் நீதிமன்றம் முன் ஆஜர்படுத்தப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் விளம்பரங்களை அகற்றுவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதற்கு தேர்தல் திணைக்களம் எட்டு மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

தேர்தல் பிரசாங்களின்போது வன்முறைகளில் ஈடுபடவேண்டாமென்று அரசியற் கட்சிகளையும் வேட்பாளர்களையும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆறுமாகாணசபைகளுக்கான தேர்தல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக

# ஊழியர், மாணவர்களுக்கு விசேட பாதுகாப்பு திட்டம்

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்புக்காக புதிய நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கல்வி அமைச்சில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் இந்தப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளர் டொக்ரர் தாரா டி மெல் தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்வதற்கான குழுவில் ஆறு மாணவ தலைவர்கள், இரண்டு சிரேஷ்ட பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர். இந்தக் குழு தினமும் இசுறுபாயவில் கூடி இந்தப் பாதுகாப்பு திட்டம் குறித்து ஆராய்ந்து வருகிறது.

### ஒரு லட்சம் வீடுகள்

திரிஸர புரவர நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் றீல் கம்பனி கொழும்பில் ஒரு லட்சம் வீடுகளை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னரே இந்தத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடருமென றீல் கம்பனித் தலைவர் கிரிசன் தெதரகொட தெரிவித்தார்.

# வெற்றிடங்களை நிரப்பாமையால் மாநகர சபைகள் மந்தகதியில்!

## கொழும்பு மேயர் பிரதமருக்கு முறைப்பாடு

இலங்கையின் மாநகரசபைகள் பலவற்றில் நிலவுகின்ற ஆளணிப் பற்றாக்குறையால், சபைகளின் நடவடிக்கைகளைத் திருப்திகரமாக மேற்கொள்ளமுடியாது இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொழும்பு மாநகர மேயர் கொண்டுவந்திருக்கிறார்.

கொழும்பு மாநகர மேயருக்கும், பிரதமருக்கும் இடையில் நடந்த சந்திப்பு ஒன்றிலேயே இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டது. இதன் போது இரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம் ஆகிய மாநகரசபைகளுக்கு ஆணையாளர்கள் நியமிக்கப்படவில்லை.

கணக்காளர்கள், சாரதிகள் உள்ளிட்ட 63 வெற்றிடங்கள் கம்பஹா மாநகரசபையில் உள்ளன. நுவரேலியா மாநகர சபையில் 112 வெற்றிடங்கள் இருக்கின்றன. இதுபோன்று ஏனைய மாநகரசபைகளுக்கும் இதே நிலைதான் நீடிக்கின்றது எனக் குறிப்பிட்டார். இந்தப் பிரச்சினைகளை தீர்க்க பொது நிர்வாக அமைச்சருடன் பேச்சுநடத்தி தீர்வுகாண்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார்.

வண்ணமிகு விழாவுடன்

# யூரோ - 2004 உதைபந்தாட்டம் போர்த்துக்கலில் ஆரம்பமானது



(போர்டோ)

உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிக்கு அடுத்தபடியாக பெரிய போட்டியாக கருதப்படும் யூரோ - 2004 உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் போர்த்துக்கலில் தொடங்கின. 16 நாடுகள் கலந்துகொள்ளும் இந்தப் போட்டி அடுத்த மாதம் 4 ஆம் திகதிவரை நடைபெறுகிறது.

யூரோ - 2004 போட்டிகள் வண்ணமிகு விழாவுடன் துவங்கின. 31 போட்டிகள் கொண்ட யூரோ - 2004 உதைபந்தாட்டப் போட்டியின் தொடக்க விழாவானது - 'உலகை கண்டுபிடித்த போர்த்துக்கல்' என்ற கருத்தின் அடிப்படையில் நடைபெற்றது.

அதனால், இந்த யூரோ - 2004 போட்டியின் மூலம் உலகின பார்வை போர்த்துக்கல் பக்கம் திரும்பியுள்ளது.

ஐரோப்பாவைச் சேர்ந்த 16 அணிகள், கலந்துகொள்ளும் இந்த யூரோ - 2004 போட்டியினை மிகப் பெரிய அளவில் நடத்தப் போர்த்துக்கல் விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தது. இந்தப் போட்டிக்காக 7 புதிய ஸ்ரேடியங்கள் கட்டப்பட்டன. 3 பழைய ஸ்ரேடியங்கள் முழுவதுமாக புதுப்பிக்கப்பட்டன. பாதுகாப்பு விடயத்தில் எவ்வித பிரச்சினையும் வந்துவிடக்கூடாது என்பதற்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

போர்த்துக்கலின் கலாசாரத்தை விளக்கும் நிகழ்ச்சிகள் அடங்கியதாக தொடக்க விழா அமைந்திருந்தது. தொடக்க விழாவில் 900 பேர் கொண்ட குழு நிகழ்ச்சிகளை நடத்தியது. போட்டிகளில் கலந்துகொள்ளும் 16 நாடுகளையும் வரவேற்கும் விதமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

போர்த்துக்கலின் கலாசார சிறப்



பம்சங்களை விளக்கும் நிகழ்சிகளுக்குப் பின்னர் இந்தப் போட்டிக்கான பாடல் ஒலிக்கப்பட்டதோடு, தொடக்கவிழா நிறைவுபெற யூரோ-2004 இன் தொடக்கப்போட்டி போர்த்துக்கல் - கிறீஸ் அணிகளுக்கு இடையே நடைபெற்றது.

இங்கிலாந்துடனான டெஸ்ட்

255 ஓட்டங்கள் முன்னிலையில்

# நியூஸிலாந்து கிரிக்கெட் அணி!

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் - நியூஸிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதன் மூலம் மூன்றாவது நாள் ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட்டுக்களை கைவசம் வைத்திருக்கும் நியூஸிலாந்து 255 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.



முதல் இனிங்ஸில் 384 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது நியூஸிலாந்து அணி. பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து ஆட்டமிழந்தது.

இறுதி 5 விக்கெட்டுக்களும் 94 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன.

தனது இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாடும் நியூஸிலாந்து சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கெயின்ஸ் 79 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணியில் ட்ரெஸ் கோதிக் 63, மைக்கல் வோகன் 61, தோர்ப் 45, பிளின்ரொப் 54 ஜோன்ஸ் 2 , கைல்ஸ் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூஸிலாந்து அணி சார்பில் கெயின்ஸ் 5 , பிராங்ளின் 4 விக்கெடடுக்களையும், ஸ்ரைறிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இனிங்ஸில் நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக றிச்சட்சனும், பிளமிங்கும் நிலைத்து நின்று ஆடி அரைச் சதத்தை நெருங்கியபோது றிச்சட்சன் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க நேரிட்டது.

அஸ்லேயும் ஓட்டமெதுவும் எடுக்காமல் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

ஸ்ரைறிஸ் 39 ஓட்டங்களையும், மக்கலம் 4 ஓட்டங்களையும் பெற்றனர். மக்மிலன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், பிராங்ளின் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களையும் பெற்றனர்.

மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் நியூஸிலாந்து அணி 5 விக்கெட் இழப்பிற்கு 190 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த டெஸ்ட் போட்டி பெரும்பாலும் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக்கூடியதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.




யூரோ 2004 உதைபந்தாட்டம்

# போர்த்துக்கல், ரஷ்ய அணிகளை வீழ்த்தி கிறீஸ், ஸ்பெயின் அணிகள் வெற்றி!



போர்த்துக்கலில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான யூரோ - 2004 உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் போர்த்துக்கல் அணி கிறீஸ் அணியிடம் அதிர்ச்சித் தோல்வியைக் கண்டது.

ஏ பிரிவில் நடந்த போட்டியில் லூயிஸ் பிகோ, பவலேட்டா, கோஸ்டின்கா போன்ற நட்சத்திர வீரர்களைக் கொண்ட போர்த்துக்கல் அணி கிறீஸிடம் 1 - 2 என்ற அடிப்படையில் தோல்வியைக் கண்டது.

போட்டி ஆரம்பித்து முதல் பாதி ஆட்டத்தில் முதலாவது நிமிடத்தில் கிறீஸ் அணிக்கு கோல் அடிக்கும் வாய்ப்புக் கிடைத்தபோதும் கிறீஸ் அணி வீரர் எஞ்சலோஸ் ரைசஸ், எட்டு யார் தொலைவிலிருந்து அடித்த குறொஸ் ஷொட்டை வெளியே அடித்ததால் தவறிப்போனது. போட்டி ஆரம்பித்த ஏழாவது நிமிடத்தில் கிறீஸ் அணி வீரர் ஜோர்ஜியஸ் கராகோனிஸ் முதலாவது கோலை அடித்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் தொடக்கத்தில் கிடைத்த பனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி கிறீஸ் அணியின் எஞ்சலோஸ் பசினாஸ் இன்னொரு கோல் அடித்தார்.

போர்த்துக்கல் வீரர் கிறிபஸ் ரியானோ ரொனால்டோ செய்த தவறினால் இந்த பனால்டி வாய்ப்பு கிறீஸ் அணிக்குக் கிடைத்தது.

இதன் பின்னர் போர்த்துக்கல் அணி வெகுவாகச் சிரமப்பட்டபோதும் கோல் எதையும் அடிக்க முடியவில்லை. இந்த நிலையில் ஆட்டம் முடிவுறும் நேரத்தில் 90 ஆவது நிமிடத்தில் பிகோ அடித்த கோனர் ஷொட்டை ரொனால்டோ தலையினால் முட்டி கோல் அடித்தார். இதன் மூலம் கிறீஸ் அணி 2-1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதேவேளை, ஏ பிரிவில் இன்னொரு போட்டியில் ரஷ்ய அணியை ஸ்பெயின் அணி வீழ்த்தியது.

இந்த இரண்டு அணிகளுக்கு இடையிலான போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் எந்த அணியினராலும் கோல் அடிக்கமுடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து 36 செக்கன்களிலேயே தமக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்



படுத்தி ஸ்பெயின் அணி வீரர் யுலன் கார்லோஸ் வலரோன் முதலாவது கோலைப் போட்டார்.

இதன் பின்னர் ஸ்பெயின் அணி சார்பிலோ, ரஷ்ய அணி சார்பிலோ எவரும் கோல் எதையும் போடவில்லை. இதனால் ஸ்பெயின் அணி 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

# கரும்புலிகள் நினைவாக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## வல்வையில் நேற்று ஆரம்பம்

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவு, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன், வல்வை விளையாட்டுக்கழகம் நடத்தும் கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை ஆரமபமாகவுள்ளது.

விலகல் முறையிலான ஒன்பது பேர் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் அனைத்தும் வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும். இந்தச் சுற்றுப்போட்டியில் கால் இறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் மின்னொளியில் இடம்பெறவுள்ளன.

நாளை மருதங்கேணி விளையாட்டுக் கழகத்துக்கும், றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் பி.ப 3.30 மணிக்கும், சிவானந்தா மற்றும் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் பி.ப 4.30 மணிக்கும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

24 கழகங்கள் பங்குகொள்ளும் இந்தச் சுற்றுப்போட்டியில் - அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இச்சுற்றுப் போட்டியின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டம் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி இரவு 7 மணிகளும், இறுதியாட்டம் 2 ஆம் திகதி இரவு 7 மணிக்கும் நடைபெறும்.

### சகீர்கான் உடற்தகுதியுடன் இருக்கிறாராம்

உடற்தகுதி விடயத்தில் தான் தற்போது நல்லமுயையில் இருப்பதாகவும், வரும் நாட்களில் காயம் இல்லாமல் முழு உடற்தகுதியுடன் இருப்பதில் கடினமாக உழைத்து வருவதாகவும் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான சகீர்கான் தெரிவித்தார்.

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களுக்கான உடற்தகுதி பயிற்சிமுகாம் பெங்களூரில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமின் கடைசி நாளின்போது பேட்டியளித்த அவர் - இனிவரும் காலத்தில் காயம் இல்லாமல் இருக்கும் விடயத்தில் கவனம் செலுத்தி வருவதாகக் கூறினார்.

எனக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் எல்லாம் குணமாகி விட்டன. தற்போது நான் முழு உடற்தகுதியுடன் இருக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கிரிக்கெட் போட்டி

# சென்றலைட் அணியை வீழ்த்தி யங்ஸ்ரார் அணி சம்பியனானது



படம் - ஜெயராட்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் அழைக்கப்பட்ட நான்கு கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி-2004 இல் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது.

30 ஓவர்கள் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில் அழைக்கப்பட்ட அணிகளான யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், சென்றலைட் விளையாட்டுக் கழகம், யாழ்.பல்கலைக்கழக அணி, கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் ஆகிய அணிகள் பங்குபற்றின.

இந்த அணிகளில் இறுதி ஆட்டத்திற்காக யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், சென்றலைட் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டன.

இந்த அணிகளுக்கு இடையிலான இறுதி ஆட்டம் நேற்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட் விளையாட்டுக் கழக அணி 27 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களையே பெற்றது.

இதன்மூலம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 8 ஓட்டங்களால் வெற்றிபெற்று 2004 ஆம் ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தை வென்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டத் தொடர் நாயகனாகவும், நாயகனாகவும் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எல்.ரஜீத் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றியீட்டிய அணிக்கு யாழ். பல்கலைக்கழக கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், பௌதீகவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான அகிலன் வெற்றிக் கிண்ணத்தையும், இறுதி ஆட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட அணி வீரர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

இந்தக் கிரிக்கெட் போட்டியில் ஆர்வலர்களும், பல்கலைக்கழக மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (தீ)

# விவசாய விற்பனைப் பிரிவொன்றை நெடுந்தீவில் அமைக்குமாறு கோரிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளின் நன்மை கருதி நெடுந்தீவில் விவசாய உள்ளீடுகளுக்கான விற்பனைப் பிரிவொன்றை ஆரம்பிக்கவேண்டும் என விவசாயிகள் தரப்பில் இருந்து கோரிக்கைள் விடப்பட்டுள்ளன.

தற்போது நெடுந்தீவு விவசாயிகள் வேலணை கமநலசேவை நிலையத்திலேயே இவற்றைப் பெற்றுவருகின்றனர். நெடுந்தீவு விவசாயிகளுக்கென புங்குடுதீவில் ஒரு கமநல கேந்திர நிலையம் திறக்கப்பட்டுள்ள போதும், அங்கு சென்று உரிய அதிகாரிகளைச் சந்திப்பதற்கோ, தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கோ வசதிகள் அற்ற நிலையில் இருப்பதுடன் பெரும்பாலான நாட்களில் இந்த நிலையம் பூட்டப்பட்டே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கடைகளின் விற்பனை விலைக்கும், கேந்திர நிலையங்களின் விற்பனை விலைக்கும் பெரியளவில் வித்தியாசமில்லை. அத்துடன், உரிய நேரங்களில் உரிய பசளைகள், விதைகள் போன்றவற்றை நெடுந்தீவுக்கு எடுத்துவந்து விற்பனை செய்தால் பெருமளவிலான ஏழை விவசாயிகளும் பயனடைவார்கள்.

இது தொடர்பாக கடந்தமாதம் இடம்பெற்ற நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

## புற்றளை மகா வித்தியாலயத்திற்கு நிதி அன்பளிப்பு

தென் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கு கனடாவில் வசிக்கும் பழைய மாணவர் ஒருவர் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கிள்ளார்.

இந்த நிதியை பாடசாலைப் பழைய மாணவர் சங்கம் பொறுப்பேற்று கணினி அறை ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். (17)

# நெடுந்தீவிலுள்ள மாவட்ட வைத்தியசாலையில் ஆளணி பற்றாக்குறையால் நோயாளிகள் சிரமம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச மாவட்ட வைத்தியசாலையில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக நோயாளர்களுக்கான மருத்துவத் தேவைகளை உடனடியாகவும், சீராகவும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பரிசாரகர்கள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக யாரும் நியமிக்கப்படாமையினாலேயே இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே வைத்தியர் முதல் சிற்றூழியர் தரம் வரைக்குமான பதவிகளுக்கு வெற்றிடம் உள்ள போதும் மேலும் பலரை உரிய மாற்றங்களின்றி இடமாற்றம் செய்தமையாலேயே இந்த நிலைமை உருவாகியுள்ளது.

வாராந்த, மாதாந்த கிளினிக் நடைபெறும் நாட்களில் அதிக நோயாளர்கள் வந்து செல்வதால், வெளிநோயாளர் பிரிவில் அவர்களது பதிவுகளை மேற்கொள்ளவென தாதியர்கள் கூடப பணியில் ஈடுபடும் நிலை உருவாகியுள்ளமை சுட்டிக்காட்டத் தக்கதாகும். (113)

# 15 லட்சம் பெறுமதியான நகைகள் அபகரிப்பு

நேற்றுமுன்தினம் அதிகாலை 1 மணியிலிருந்து 5 மணிக்குள் மாலுச்சந்தியில் வசிக்கும் மா.தியாகராசா என்பவரின் வீட்டில் 15 இலட்சத்திற்கு மேல் பெறுமதியான நகைள் களவாடப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

நள்ளிரவு 12 மணிவரை தனது நகைத் தொழிலைச் செய்து முடித்து விட்டு நித்திரைக்குச் சென்றவர் காலை 5 மணியளவில் எழுந்து பார்த்த பொழுது நாய் இறந்திருப்பதை கண்டார்.

அதைத் தொடர்ந்து தனது பட்டறையைப் பார்த்த பொழுது பொருட்கள் சிதறிக்கிடந்ததை அவதானித்து நகைகள் வைக்கப்பட்ட அறையை திறந்து பார்த்த பொழுது வீட்டின் பின்பக்க யன்னல் கம்பிகளை வளைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த நகைகள் களவாடப்பட்டுக் காணப்பட்டன.

இரு நாட்களுக்கு முன்பாக இனந்தெரியாத ஒருவர் அந்த ஒழுங்கையில் நடமாடியதை கண்ட பொதுமகன் ஒருவரால் வதிரி அரசியற்றுறைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸாரும், நெல்லியடிப் பொலிஸாரும் விசாரணையை மேற்கொண்டு வருகிறனர். (12)



*புனித யூதாததேயு இளையோர் மன்றத்தினால் கடந்த மாதம் 30ஆம் திகதி நடத்தப்பட்ட பலவகை கலை அம்சப்பொருட்களடங்கிய கண்காட்சியை மக்கள் பார்வையிருடுவதையே படத்தில் காணலாம். (41)*

# வடமராட்சி வலய ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை ஆரம்பம்

(ஆழியவளை)

இளைஞர் யுவதிகளுக்கான சுகாதாரம் தொடர்பாக வடமராட்சிக் கல்வி வலய ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை இன்றும் நாளையும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றும் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கடிதங்கள் பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரனால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பங்கு பற்றும் ஆசிரியர்களுக்கு நாள் ஒன்றிற்கு 250 ரூபா கொடுப்பனவும் வழங் கப்படவுள்ளது. (122)

## இளவாலையில் திருட்டு

இளவாலை பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் பட்டப் பகலில் நுழைந்த திருடர்கள் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச்சென்றனர்.

வங்கி ஒன்றின் உதவி முகாமையாளரான ஆனந்தராசா என்பவரின் வீட்டிலேயே கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இந்தத் திருட்டு இடம்பெற்றது.

வீட்டில் எவரும் இல்லாத சமயத்திலேயே திருடர்கள் நுழைந்து தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. (71)

# நயினாதீவு அம்மன் ஆலய உற்சவம் வெள்ளியன்று ஆரம்பம்

(வடமராட்சி)

நயினை நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடாந்து 15 தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

இந்த உற்சவத்திற்கான விசேட கடற்போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. அக்காலத்தில் அடியார்களுக்கான விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் நயினாதீவு ஆலயச் சூழலில் சுகாதார வசதிகள், மின்சார வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், குடி நீர் வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்தி கொடுப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது.




## பெருங்குளம் விநாயகர் ஆலய கும்பாபிஷேகம்

சாவகச்சேரி கல்வயல், பெருங்குளம் அருள்மிகு அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயப் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.31 முதல் 10.00 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறும். முதல்நாள் வியாழக்கிழமை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும். கும்பாபிஷேகக்கிரியைகள் யாவும் ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ் கந்தக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார் குழுவினரால் நடாத்தப்படும்.

## உள்ளூராட்சி மன்றங்களில் உள்ளக கணக்காய்வு பிரிவு

(சுதுமலை)

உள்ளூராட்சி மன்றங்களில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சி உதவியாளர் உட்பட மூன்று சிரேஷ்ட எழுதுநர்களைக் கொண்டதான இந்தக் கணக்காய்வுக் குழு வடக்கு கிழக்கிலுள்ள 15 உள்ளூராட்சி அலுவலகங்களிலும் அமைக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சிமன்ற செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை இலகுவாக்குவதற்காக, இந்தக் கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (91)

# உலகவங்கியின் உதவியுடன் தென்மராட்சியில் வீட்டுத்திட்டம்

(வடமராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் உலக வங்கியின் 25 வீட்டுத்திட்டப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்களுக்கே வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் மத்தியில் கல்வீடுகள் அமைக்கும் திட்டம் ஒன்றை உலகவங்கி ஆரம்பித்துள்ளது.

உலக வங்கியினால் அமைக்கப்படும் வீடுகள் மேற்படிபகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே வழங்கப்படவுள்ளது. (17)

# சமூக சேவை அதிகாரிகள் குழு இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது

இலங்கையின் சமூக சேவை அதிகாரிகள் குழுவொன்று நாளை யாழ். குடாநாட்டிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை சமூக சேவை பிரதி பொதுமுகாமையாளர் நாயகம் பி.ஏக்கநாயக்க, இதன் இணைப்பாளர் தாகரறாதியோ ஆகியோர் கொண்ட குழுவே வருகைதரவுள்ளது.

இவர்கள் யாழ். குடாநாட்டில் உள்ள சமூக சேவை அதிகாரிகளுடனும் சமூக சேவை உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடவுள்ளனர். எதிர்காலத்தில் சமூகசேவை தொடர்பான செயற்பாடுகளை யாழ். குடாநாட்டில் எவ்வாறு விஸ்தரிப்பது என்பது குறித்து இந்தச் சந்திப்பில் விசேடமாக ஆராய்ப்படவுள்ளது. யாழ். குடாநாட்டின் சில பகு திகளையும் இக்குழுவினர் பார்வையிடவுள்ளனர். இதைவிட குறிப்பிட்ட சில அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நெடுந்தீவு தபால்பொதிகள் கடல்நீரில் நனைகின்றன

(நெடுந்தீவு)

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு தபாற்பொதிகள் எடுத்து வரப்படும்போது, சிலவேளையில் கடும் காற்று காரணமாக அள்ளி வீசப்படும் கடல்நீரினால் கடிதங்கள் நனையும் நிலை தொடர்வதாக நெடுந்தீவு பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற திறந்த வள்ளங்களே தற்போது சேவையில் ஈடுபடுவதாலும், கடுங்காற்றுக் காலமாகையாலும், நெடுந்தீவுக்கு வரும் பயணிகளோ, பொருட்களோ நனையாமல் கரைசேர்வதில்லை.

இந்த வகையில் தபாற்பொதிகளும் நனைவதனால் பொது மக்கள், அரசதிணைக்களங்களுக்கான கடிதங்கள் நனைந்து விடுவதனால் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவித்தா். (113)

# நெடுந்தீவு வைத்தியசாலைக்கு மருந்து பொருட்கள் வந்தன

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கான ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் உத்தியோகத்தர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பிரதி மாகாண சுகாதார பணிமனையில் இருந்து எடுத்து வரப்பட்டன.

ஏற்பு, தடுப்பு ஊசிமருந்துகள் மற்றும் குளிசைகள், பண்டேஜ், பிளாஸ்ரர் போன்றவற்றுக்கு கடந்த சில வாரங்களாக நிலவிய தட்டுப்பாடு தற்போது நீங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# கலாசாரம்



# அந்த வழியில் அவன் விழிகள்

சிறுகதை

முருகு பாரிமகன்

காற்றுக்கு அங்கும் இங்கும் அசைந்தும், ஆடியும் அந்த அறையில் அணைந்து போகாமல், மெல்லிய ஒளியைப் பரப்பி இருளை விரட்டிக் கொண்டிருந்த குப்பி விளக்கையே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான் வசந்தன்.

அறை என்று சொல்லப் பொருந்தாவிட்டாலும் அவனைப் பொறுத்த வரையில் அதுவே அவனது மாளிகை.

நான்கு புறமும் மண் சுவர் நடுவில் முன்புறம் ஒரு கதவு கிடுகுகளால் கட்டப்பட்ட தட்டிகளால் அடைப்பு சிறிய விறாந்தை. விறாந்தையின் ஒரு புறத்தில் மட்டை வரியப்பட்ட சமையற்கூடம், பனை ஓலையால் வேயப்பட்டிருந்து.

முற்றத்தில் மணம் வீசும் மல்லிகைப் பந்தல்.

இளமையை விழுங்கிய படியே முதுமை ஆக்கிரமிக்கத் தொடங்கிய தோற்றம்.

உறவுகள் விலகிப் போனாலும் ஊரின் உதவி அவனுக்கு இருந்தது.

அவன் அந்தக் கிராமத்துப் பள்ளிக் கூடத்தில் ஒரு ஆசிரியன்.

அவ்வளவு தான்.

அவன் தனக்குள் எதையோ தேடத் தொடங்கினான். அல்லாடிக்கொண்டிருந்த விளக்கின் நாக்கு அதையே குறி பார்த்துக் கொண்டிருந்த விழிகள், இழந்துபோன இளமைக்குள் தொலைந்து போன வாழ்க்கையின் இருள் விழுங்கிப்போன பகுதிகளில் ஒளிக்கீற்றைப் பாய்ச்சிக் கொண்டிருந்தனவோ?

கரடு முரடான பாதைகளில் அவன் தடங்கள் ஆழப்பதிந்து இலக்கை நோக்கி நகர்ந்த வேளைகளை எண்ணிப் பார்த்தான்.

நீண்ட பெருமூச்சு எழுந்து ஓய்ந்தது.

எப்போதும் அவன் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த உரிமைத் தீ, அவன் விடுதலைத் தாகம் அடைய வேண்டிய பெருவாழ்வுக்கான வழியைத் திறந்து விட்டிருந்தபோது அவன் தளர்ச்சி கண்டதில்லை.

வர்க்கம் வர்க்க நலம் வர்க்கப் புரட்சி என்றெல்லாம் அவனுள் உருவாக்கம் பெற்ற சிந்தனைத் தளத்தில் அவன் கால் பதித்து நின்றான். சமூகக் கட்டுகளை அறுத்தெறிந்து ஒரு புதிய சமூகத்தின் உருவாக்கத்துக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்ளத் துடித்தவன் தன் குடும்பச் சுமையையும் தாங்கி நின்றான்.

எதற்கும் முகம்கொடுத்துப் பழகிப்போன அவன், வாழ்க்கை என்ற கடலில் அலைகளில் எத்துண்டு போகாமல் நிதானமாக எதிர்நீச்சல் அடித்தான்.

அடிமைத்தனத்தை விரும்பும் எந்த மனிதனையும் அவன் ஏற்றுக் கொண்டதில்லை. அது போல் எந்த மனிதனிடத்தும் அதிகாரம் செலுத்துவதையும் அவன் கற்றுக் கொண்டதில்லை.

தோழமை உணர்வுடன் உறவுகளை நேசித்தான் உண்மை வாழ்வுக்குள் உள்வாங்கிக் கொண்டு புதிய வாழ்வுக்கான தேடலைத்தொடர்ந்தான்.

பொய்மை வாழ்வுக்குள் புதைந்து கொண்டு புழுவாக நெழியும் மனிதரை வெளியே கொண்டு வருவதிலே அக்கறையாக இருந்தான்.

வாழ்வதற்காகப் பிறந்தவன் வாழ்வதற்காகவே போராட வேண்டியிருந்த நிலையை எண்ணியே வருத்தப்பட்டான்.

சமூக உரிமைகள் மறுக்கப்பட்டு சிறு வயதிலிருந்தே கல்விச்சாலைகளிலும், கோவில்களிலும், பொது இடங்களிலும் புறக்கணிக்கப்பட்டு வேதனைகளும், துன்பங்களும், தொடர் கதைகளாக அடுத்த தலைமுறைகளும் சுமந்து விடக்கூடாது என்பதில் அக்கறையாக இருந்தான்.

இந்த எண்ணங்கள் அவனை தீயாக உருவாக்கின.

தனி மனிதக் குமுறல்கள், மனிதத் திறன்களாக வடிவம் பெறும்போது தான் வலிமை பெறுகிறது என்று யதார்த்தத்தை அவன் நன்கு தெரிந்து கொண்டான். இந்த வகையில் தான் திரட்சிகொண்ட மக்கள் அணி ஒன்றை உருவாக்குவதிலும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப்பெற்றுக் கொள்வதற்கான போராட்ட சக்திகளுடன் தன்னையும் இணைத்துக்கொண்டு இதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் அவனது அக்கறை அதிகமாகிக் கொண்டு வந்தது.

சமூகத்தின் பிற்போக்குத் தனங்களை உடைத்தெறிவது என்பது அவனுக்கும் அவன் சார்ந்த அமைப்புக்கும் சவாலாகவே அமைந்தது என்பது தான் உண்மை நிலையாக இருந்தது.

அவனது தீவிர போக்குளை ஜீரணிக்க முடியாதவர்கள்

"கடை கெட்ட காவாலி" என்றனர்.

"குழப்பக்காரன்" என்றனர்.

"வாழத் தெரியாத முட்டாள்" என்றனர்.

"விச வண்டு" என்றனர்.

இந்த வசைவுகள் யாவும் தன்து வழியில் எதிரிகளால் எய்யப்படும் விச அம்புகள் என்பது அவனுக்குப் புரிந்தது.

அதற்காக அவன் சோர்ந்து போகவில்லை. மேலும்



வலுவடைந்தான்.

அவன் தன் இலட்சியக் கனவுகளுடன் மிதந்தான்.

உணர்வுகள் சுமந்து நிற்கும் ஒரு மக்கள் திரளில் அவன் சங்கமித்தான்.

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கின்ற ஒருபுதிய உலகுக்காக அவன் வியர்வை சிந்தி உழைத்தான். குருதி சிந்தவும் உயிரைக் கொடுக்கவும் அவன் தயாராக இருந்தான்.

அந்த விடிவினை நோக்கிய பயணத்தில் அவன் எடுத்த முடிவுகள் இன்று அவனையே கேள்வி கேட்டுக் குழப்பியது.

தேசிய வாதம் முளைத்து எழுந்ததும் அது இனவாதத்துள் புகுந்ததும், பௌத்த மத மேலாதிக்கம் அவன் சார்ந்தவர்களை விழுங்கிக் கொண்டிருந்ததும் தேசிய முதலாளித்துவத்துடன் ஒத்துப்போய் அதனுடன் சங்கமமாகிப் போனதும் வர்க்கப் புரட்சி என்ற கோஷம் மாறி ஜனநாயக பாரம்பரியத்துள் நாடாளுமன்றத்தின் மூலம் மாற்றத்துக்கான வழிமுறைகளைத் தேடியதும் அவன் நம்பிய புரட்சி அரசியல் தோற்கடிக்கப்படுவதற்கான, எதிர்வு கூறலுக்கான காட்சிகளைத் தோற்றுவித்த போதுதான் அவன் மூர்ச்சயித்துப் போனான்.

"இவர்கள் வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்தியற்றுப் போனவர்கள்"

தென்பட்டன. உலகம் போற்றிய மகா தத்துவம் சிலரின் பாதுகாப்புத் தளங்களாக உருவாகி வருவதை உணர்ந்தான்.

அவன் தன்னைத் தானே தேற்ற முற்பட்டான். மனச்சுமை அவனை அழுத்திக் கொண்டிருந்தது.

பொதுவுடமைத் தத்துவம் தோற்கடிக்கப்பட முடியாதது என்பது அவனது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆனாலும், இந்த மண்ணில் அதை முன்னெடுக்கும் தலைமை தகுதியற்றிருந்தமையை அவன் உணர்ந்து கொண்டான்.

இதனால் அவன் உள்ளப் புகைச்சலுடன் சுயநலத்தலைமைகளை ஒதுக்கிவிட்டு சில காலம் அமைதியாக இருந்தான்.

அவன் காத்திருந்த வர்க்கப்புரட்சி பின் தள்ளப்பட்டதை அவன் ஏற்றுக் கொண்ட போதும் நம்பிக்கை இழக்காதவனாகவே வாழத்தலைப்பட்டான். அது அவனால் முடியவில்லை.

பகை முகாம்களின் பல்லிழிப்புக்களையும் சகித்துக் கொண்டு வாழ வேண்டிய துர்ப்பாக்கியம் அவனுக்கு.

அவன் விழித்துக் கொண்டான்.

ஒரு தேசம் இரு இனங்களின் வர்க்கவிடுதலை என அலைந்தவனுக்கு பொருத்தப்பாடற்றதாகப் போனதும் இனவாதம் தலைநிமிர்த்தி நாட்டின் மீது உரிமை கோரி ஏனைய இனங்களை அடக்கி ஒடுக்கி அழிக்க நினைத்ததும் பாரம்பரிய பிரதேசங்களைப் பார்த்தது. வன்பறிப்புகள், கொலை, கொள்ளைகள் அவன் நெஞ்சிலே தீயை வளர்த்தன.

"ஏனிந்த அவலங்கள்?"

"ஏனிந்த அழிவுகள்?"

"ஏனிந்த இழப்புகள்?"

அவன் உள்ளம் தேடலில் சங்கமித்தது.

ஒரு இனம் தன்பலத்தால் பலம் குறைந்த இனத்தின் மீது நடத்தும் அதிகாரவெறிக்குப் பெயர்தான் ஜனநாயகமா?

சொந்த நிலத்தை இழந்து சுயத்தின் வேரை இழந்து வாழ்தல் என்பது சுதந்திரமான வாழ்வா?

சேர்ந்து வாழமுடியவில்லை என்றால் பிரிந்து வாழ்வதில் தவறில்லை.

அவன் லெனின் கூறிய வார்த்தைகளை எண்ணிக் கொண்டான்.

"ஒரு தேசிய இனம் சேர்ந்து வாழ விரும்பாதவிடத்து தன் சுயநிர்ணய உரிமையைப்பெற்று பிரிந்துபோகும் உரிமை உண்டு.

மன விசாரணைகள்,

அவன் தெளிந்து கொண்டான்.

"இனவாதம் என்றும் வர்க்கப் புரட்சிக்குத்துணை நிற்கப்போவதில்லை." என்ற உண்மைகள் அவன் உள்மனதில் உறைக்கத் தொடங்கியது.

அவன் அடுத்த கட்டத்திற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். சிலகாலங்கள் நம்பிக்கையுடன் நகர்ந்து கொண்டிருந்தது.

சமூக மாற்றத்துக்காக விலைகள் கொடுக்கத் தயாரானவர்களுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டான்.

காலப்போக்கில் அங்கும் அவனுக்குக் கசப்பான காட்சிகளே

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட கொடுமை அவன் மனதில் அழுத்தங்களை ஏற்படுத்திவிட்டன.

ஒருமொழி, ஒரு இனம் எனப் பேசுதல் இனவாதம் என்றால் தமிழர் பேசுவதும் இனவாதம் தானே என்ற கருத்தோடு ஒருநாடு இருமொழி என்ற எல்லையை வகுத்துக்கொண்டு வாழ்ந்த காலங்கள் அவனது இருண்ட காலங்களே என அவன் ஏற்றுக் கொண்டு வெளிச்சத்தை நோக்கி நடக்கவும் தன் வாழ்வின் இறுதிக் காலத்தை யாவது பயனுள்ளதாக மாற்றவும் நினைத்தான்.

ஒரு காலம் தமிழ் மண்ணில் மேற்குடியாதிக்கமே நிலவி வந்துள்ளதும் அவர்களே பெரும்பான்மை இனத்துடன் கைகோர்த்தனர். இந்த மண்ணிலும் ஒடுக்குமுறைகள் மலிந்திருந்ததையும் அவன் உணராமல் இல்லை.

ஒடுக்கப்படுகின்ற இனம் தன் விடுதலைக்காகப் போராடும் என்ற யதார்த்தம் உணர்த்தப்பட்டுள்ளது.

ஒரு தலைமுறை வீழ்வது அடுத்த தலைமுறையின் எழுச்சிக்காகவே! அந்தத் தளத்திலே நின்றுதான் அடுத்த தலைமுறை தலை நிமிர்த்துகிறது.

தலை நிமிர்வு என்பது சாதாரண நிகழ்வு அல்ல, தியாகங்களினாலும், இழப்புகளினாலும் தற்கொடைகளாலும் உருவாகி எழும் அனற் கோளங்களின் வெளிப்பாடே என்பதை அவன் அறியாமல் இல்லை.

அவன் பல கிராம மக்களுக்கு அறியப்பட்டவனாகவும் அந்த மக்களின் இன்பத்துன்பங்களை தனதாக்கிக்கொண்டு இருந்ததால் அவனைச் சுற்றி பலர் இருந்தனர். அவனை எதிர்த்தவர்கள் கூட அவன் மீது அனுதாபத்துடன் பார்த்தனர்.

எந்த மக்களுக்குப் புரட்சிப் பாடம் கற்பித்தானோ அந்த மக்கள் முன்னால் தன் நிலையை எடுத்துச் சொல்ல அவனால் முடியவில்லை. அவன் அரசியல்வாதியாக இருந்திருந்தால் அவன் கவலைப்பட்டிருக்கமாட்டான். அவனது புரட்சிக்குரல் அடைத்துப் போனது.

நம்பிக்கையானதொரு சமூக மாற்றத்துக்காக வர்க்கத்தின் புரட்சிக்காக உழைத்தவன் இன்று அவனைப் போன்றவர்கள் சிலரும் ஒதுங்கி இருக்கவேண்டிய இக்கட்டான நிலையை எண்ணி வருந்துவதில் பயனில்லை என உணர்ந்தான்.

உடைத்து நொறுக்கப்பட்ட இலட்சியக் கோலங்களை மீண்டும் ஒட்டிக் கொண்டு செயற்பட அவன் விரும்பவில்லை. புதியதொரு பாதையில் அவன் செல்லவே நினைத்தான். தன் உணர்வுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு வாழவே விரும்பினான்.

நிம்மதி அவனை விட்டு வெகு தூரம் போய் நின்றுகொண்டு அவனை பார்த்துச் சிரித்தது.

அவன் குப்பி விளக்கைப் பார்த்தான்.

அது எரிந்து கொண்டிருந்தது.

அந்த மெல்லிய இருள் கரைக்கும் வெளிச்சத்தில் தமிழீழப் படத்தின் எல்லைக்குள் தலைவனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த வழியில் அவன் விழிகள்... பரவி ஊடுருவின.



# இலக்கிய முத்து

## சத்திரத்தில் கிடைத்த கவிதை

கவிஞர்கள் காலத்தால் கருத்தரிக்கப்பட்டவர்கள். காலம் பிரசவித்த உணர்வுச்சிற்பிகளே கவிஞர்கள் உள்ளத்து உணர்வுகளுக்கு உருவம் கொடுப்பவனே கவிஞன். அவனது உள்ளத்து காதல், வீரம், கோபம், பாசம் என்னும் உணர்வுகள் எல்லாம் மொழியுருப்பெற்றுக் கவிதைகளாகிவிடும்.

வானமகள் கண்ணீர் சிந்தாததால் பூமாதேவி வாடி நல்குரவென்னும் அரக்கன் நானிலத்தை வருத்திய நாயக்கர் காலத்தில் ஒரு நாள் பழமரங்களை நோக்கிப் படையெடுக்கும் பட்சிகளைப் போல் மனிதர்கள் உணவிற்காகப் பரிதவிக்கும் அவலநிலை. நச்சுப்பொருளைத் தவிர நாறலையும் உண்ண வேண்டிய பரிதாபம். ஆங்காங்கே அன்ன சத்திரங்களில் ஒரு வேளை உணவு மட்டும் வழங்கப்படுகின்றது.

வாட்டும் வறுமையிலும் வருந்தாது கவி மீட்டும் காளமேகம் கும்பகோணத்தில் உள்ள அன்ன சத்திரம் ஒன்றை நோக்கி நடக்கின்றான். அவனைப் போன்றே பலர் தமது வயிற்றை நிரப்புவதற்காக அங்கே அமர்ந்திருக்கின்றார்கள். சத்திரத்துக்குச் சென்ற கவிஞன் பந்தியில் அமர்ந்து கொள்கின்றான். அவனருகில் ஒரு சோழநாட்டுப் பிராமணன் வந்தமர்கின்றான். உச்சந்தலையிலே ஒரு குடுமி. உணவினை விழுங்கி விடுவது போல் ஒரு பார்வை. பருத்த பானைவயிறு. இவை அவனது நிரந்தர உடமைகள்.

உண்டு வாழ்வதற்கென்றே உலகத்தில் உதித்தவன் போன்று அருகில் அமர்ந்திருப்பவர்கள் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாது அப்படியே கைகளால் சோற்றைப் பிசைகின்றான். வாய்க்குள் திணிக்கும் சோற்றுப் பருக்கைகள் சில கடைவாயினூடாக மீண்டும் இலையை முத்தமிடுகின்றன. அருகில் இருப்பவர்களுக்கு அவன் செய்கை அருவருப்பாக இருக்கின்றது. அவனுக்கோ அதைப்பற்றி எந்தச் சிந்தனையும் இல்லை. அவனது கைகளும் வாயும் தமது வேலையைச் செவ்வனே செய்கின்றன.

ஒரு கணத்தில் அவனது முன்குடும்பி அவிழ்ந்து பிசையும் சோற்றோடு கலக்கின்றது. அவனோ உண்ணும் அலாதியில் மறுகையால் குடுமி மயிரைப் பின்னே வீசுகின்றான். வீசப்பட்ட குடுமிமுடி காளமேகத்தின் வதனத்தை மெல்ல வருடிச் செல்கின்றது. அவனது குடுமியிற் காணப்பட்ட எச்சிற்சாதம் காளமேகத்தின் வதனத்தில் வண்ணக் கோலங்களை வரைந்துவிட்டன.

காளமேகம் கோபத்தால் கருக்கொண்டது. கோபத்தின் உச்சியில் வார்த்தைகள் உருளுகின்றன.

அவிழ்ந்த குடுமியை உடைய சோழநாட்டுப் பிராமணனே, உண்டவாய் கழுவாதாவனே, இழிந்த செயல்களைப் புரியும் கெடுகுடிமகனே, பட்ட மரத்தில் வீற்றிருக்கும் ஆந்தையே, தான் கக்கியவற்றை மீண்டும் உண்கின்ற நாயே, குரங்கே, வேலை இல்லாத ஒருத்தி வீணாக உன்னைப்போன்ற ஒருவனை ஏன்தானோ பூமியிற் பெற்றாள் என வார்த்தைகளால் வாட்டி விட்டுச் செல்கின்றான்.

கவிஞரின் நியாயமான கோபத்தின் முன்னால் எவரும் துஷ்டமானவர்களே. 'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச்சோழியா சோற்றுப் பொருக்குலர்ந்த வாயா புலையா - திருக்குடந்தைக் கோட்டானே நாயே குரங்கேயுனை யொருத்தி போட்டாளே வேலையற்றுப் போய்''.

- லெஸ்லி

# காந்தக் காதல் இது...!

வீரஞ்செறிந்த விடுதலைப் போருக்கு மறுபெயராகிவிட்ட வியட்நாம் நாட்டை அழியாக் காதல் அணுவரிசையில் இடம் பெறவைத்த காதலர்களின் கதை இது.

அவனும், அவளும் போராளிகள் - அவர்களின் அன்புக்குரிய வியட்நாம் தேசத்தை விழுங்கப் படையெடுத்த அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்த்துக் களம்கண்ட விடுதலைப் படையின் வீரர்கள் ஒரே படைக்குழுவில் இடம் பெற்றவர்கள். வல்லூறுகளாய் வட்ட மடித்த வானூர்திகளை எதிர்த்து பீரங்கிகளை இயக்கியபடியே அவர்கள் காதலைப் பரிமாறிக்கொண்டார்கள். வடுதலைத் தேசத்தில் சிறகு விரிக்கக் கனவுகண்ட காந்தகக் காதல் அது.

ஒருநாள் அந்தப் படைக்குழுவில் படைத்தலைமையிடமிருந்து ஓர் ஆணை வந்தது. பகைப் படையின் தளபதிகள் கூடப்பேசிப் பெரும் தாக்குதல் திட்டம் தீட்டப் போகும் இடம், நேரம் சூழலைக் குறிப்பிட்ட, அந்தக் கூட்டத்தையே தாக்கித் தகர்க்கவேண்டும். இந்தப் பெரும் பொறுப்பைத் தங்களை நம்பித் தலைமை ஒப்படைத்ததில் அந்தக் குழுவுக்கு மட்டில்லா மகிழ்ச்சி! சாவை நெஞ்சில் பூசிக் கொண்டு சமர்க்களத்தில் உயிர்ப்பவர்களுக்கு மட்டுமே அந்த மகிழ்ச்சி புரிபடும்.

பகைத் தளபதிகள் கூடிப்பேச விருந்த உயர்பாதுகாப்புக் கூட்டத்துக்குள் ஊடுருவிக் குறிதவறாமல் செயல்முடிக்க என்ன வழியென்று குழுக கூடி விவாதித்தனர். குழுவில அவர் மட்டுமே பெண். ஒரு பணிப்பெண்ணாக உள்ளே நுழைந்து கூட்டம் நடைபெறும் இடத்திற்குத் தேனீர் கொண்டு செல் லத் தன்னால் மட்டுமே இயலும் என்று அவர் சொன்ன போது மற்ற வர்க



ளால் மறுக்கமுடியவில்லை.

தட்டில் தேனீர் கோப்பைகள், இடுப்பில் கொலைக்குண்டுகள் என்று அப்போதே திட்டம் சொன்னாள். வெடித்துச் சிதறப்போகிற அவளை அனைவரும் வாழ்த்தி விடையும் தந்துவிட்டனர்.

புறப்படுமுன் அவள் அவனிடம் தனித்துப் பேசினாள். அங்கே குழு இல்லை. கட்சி இல்லை, படை இல்லை, நாடு இல்லை, பகை இல்லை, வல்லாதிக்கம் இல்லை, விடுதலையும் இல்லை, அவனும் அவளும் அவர்கள் காதலைத்தவிர வேறு எதுவும் இல்லை.

"அன்பே நீ போகத்தான் வேண்டுமா?"

அதிலென்ன சந்தேகம்?

நான் சொன்ன யோசனையை நீயும் தானே ஏற்றுக்கொண்டாய் எல்லோருமாக எடுத்தமுடிவு. செயலாக்கப்பட வேண்டியதுதானே"?

"எல்லாம் சரி... ஆனால், நம் காதல்? நம்கனவுகள்?" "நம் காதல் ...? அதிலென்ன தயக்கம்? நான் உன்னைக் காதலித்தேன், நீ என்னைக் காதலித்தாய். அதற்கும் முன்பே நாம் எல்லோரும் தேசத்தைக் காதலித்தோம். அதன் விடுதலையைக் காதலித்தோம். அதுதானே நம் முதற்காதல்....?

அவன் தன் தோல்வியில் வெற்றி கண்டு அவளுக்கு இறுதி விடைதந்து அனுப்பிவைத்தான். வீர வியட்னாம் விடுதலை வரலாற்றில் அழியா இடம் பிடித்த அந்தக் காதலியின் பெயர் குயென். தி.குயென் என்று படித்த நினைவு. காதலன் பெயர் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

பூங்கொத்துகளுக்கும் பொன்னேற் பரப்புகளுக்கும் இடையில் மலரும் வளரும் காதல்களைக்கண்டு வியக்க எதுவுமில்லை. சொல்லப்போனால் பிரச்சினைகள் இல்லாதவரையில்தான் காதல்கள் இனிக்கும். பிரச்சினை என்று வருகின்றபோது பெரும்பாலான காதல்கள் உடைந்துவிடுகின்றன. வெங்கொடுமைகளுக்கும், வெடிகுண்டுகளுக்குமிடையே மலர்ந்த இந்தக் காதலைப் படிக்கும்போது கண்கள் பனிக்காமல் இருக்கமுடியவில்லை.

# உதிரும் நிலவுகள்



தனித்த இரவில்
உறக்கங்கலையாத ~ உனது
முகத்தின்
புன்னகையையும்
சில்லிட்டுக்கொண்டிருக்கும்
பாதங்களையும் ~ எப்படி
நினைவு கொள்வேன் இனி.
மட்டக்களப்பில் ஏரியைக் கடந்து
எத்தனை தரமாய்
வன்னியைத் தொட்டாய்
குளிர்ந்த காட்டினிட
பங்கர்களில் நின்றும்,
சென்றியில் குந்தியும்,
வனங்களைக் கடந்ததை ~ ஒரு
புனைகதைபோலச் சொன்னாய்
உன் புன்னகைக்குப் பின்னே
புதைந்து கிடக்கும் வசந்தத்தை
மறைக்கவும் தெரியாத
புலிப் பிள்ளையே! ~ எனது
நண்பர்கள் அறுவரும் நீயுமாய்
குருதியில் நனைந்தபோது ~
காற்றும்
வாயடைத்துப் போயிற்று
வாமகாந் ~ எனது
சக்கர நாற்காலியின் கீழ்
ஸமிதிபடும் உலகத்தை
ஒரு குழந்தையின் வெற்றியாய்
சந்தோசம் கொள்வாய் ~ உனது
றைபிளுக்கும், பேனாவுக்கும்
தொடர்பிருந்ததை ~ வரலாறு
ஒரு தீர்க்க தரிசியைப் போலச்
சொல்கிறது.
உனது சிரிப்பும் பேச்சொலியும்
இந்த வனங்களிடை ~ என்றும்
சிறகடிக்கும்.
வாமகாந்
எனது அன்புக்குரிய போராளியே
வரலாறு
இந்தத் தேசத்தில் ~ நீண்டு செல்லும்
சமுத்திரம் போன்றது.

- முல்லைக்கமல்

# நூல் அகம்



| | |
|---|---|
| நூலின் பெயர் | கைக்குள் சிக்காத காற்று |
| எழுதியவர் | த.ஜெயசீலன் (கவிதை தொகுப்பு) |
| முதற்பதிப்பு | 2004 |
| வெளியீடு | அருணன் பதிப்பகம், நல்லூர், |
| விலை | ரூபா 150 |

காற்று வீசிக்கொண்டிருக்கிறது. காற்றின் வீச்சிலே இனிய மலர்களின் வாசனை புறப்பட்டு வருகிறது. மண் வாசனை குபீரிடுகிறது. மழைச்சாரலின் மயக்கும் வாடை மனங்களை மயங்க வைக்கிறது. இடையிடையே போர் தொட்ட வடுக்களையும் சீண்டிப் பார்க்கிறது காற்று. தெருவோரங்களில் நிகழ்ந்த மரணவாடையை நாசிக்கு இழுத்து வருகிறது. கால வெள்ளத்தில் கடந்து வந்த காயங்கள், புண்பட்ட வேதனைகள், எல்லாவற்றையும் தொட்டுக் காட்டுகிறது காற்று. நினைவு மூங்கில்களை உரசி, உரசி உணர்வில் தோய்ந்த இசையினைப் பிரசவிக்கிறது. அது "கைகளுக்குள் சிக்காத காற்று..."

கவிஞர் த.ஜெயசீலனின் இரண்டாவது தொகுதியாக வெளிவந்திருக்கும் "கைகளுக்குள் சிக்காத காற்று" கவிதை நூல் பற்றிய சிறிய அறிமுகக் குறிப்பே இது. எண்பத்து நான்கு சிறியதும், பெரியதுமான கவிதைகளைக் கொண்டிருக்கும் இந்த நூலில் பலவிதப்பட்ட உணர்வுகளை, வாழ்நிலையைத் தரிசிக்க முடிகிறது. வாழ்வின் பலவீனமான தருணங்களில், நொந்து போகாது, நம்பிக்கையோடு சிலிர்த்தெழச் செய்யும் இறை நினைவு ஆரம்பக் கவிதையிலிருந்து ஆங்காங்கே பரந்து காணப்படுகிறது.

மேலும், இயற்கை, காலம் போன்றவற்றின் செதுக்குகைகளும் சமுதாயத்தின் போலித்தனங்களும், போரின் வடுக்களும், மனதின் அகங்காரங்களும், நெகிழ்வுகளும் அந்தக் கவிதைகளில் பிறிடுகின்றன. போர் ஆளுகின்ற இந்தத் தேசத்தில் தாய்மண் குறித்தான ஏக்கம் சுடர்வதை அநேகமான பாடல்களில் காணமுடிகிறது. இல்லாத இதம், நாட்டுக்குரைத்தல், கொள்ளை போன குளம், மெய்யுறவு போன்றன அத்தகையன.

"நீயும் பகட்டுகளின் பின் பழசை மறந்தனையோ...?" என்று மெய்யுறவில் எழுகின்ற கேள்வி இன்றைய சூழ்நிலையில் மீண்டும் ஒருமுறை கேட்கப்பட வேண்டியதாகிறது.

'மறத்தல்' பற்றிய இன்னுமொரு கவிதை இப்படி அமைகிறது.

"இவ்வளவு சுலபமாயா எல்லாம் மறந்து போச்சு...?
இதயத்தில்
அன்று இட்ட தீயும் அணைந்ததுவா....?
காதுகளில்
அன்றறைந்த ஓலம் அகன்றதுவா....?
கண்களுக்குள்
கல்வெட்டாய் நின்றகாட்சிகள் மறைந்தனவா...?
அவ்வளவு சுலபமா, 'அத்தனையும்' மறந்து போதல்....?"

என்று மனதைக் கீறும் கீறல்களுக்கு விடையாய், காயங்கள் மறந்தாலும் வடுக்கள் நிலைக்க வேண்டும் என்று தத்துவம் பேசுகிறது கவிதை.

கண்டி வீதியில் கவிந்த கவிதை, கழுத்தறுந்த சேவல் போன்ற கவிதைகள் போர் அரக்கனால் நசுக்கப்படும் உயிர்கள் மீதான மனிதாபிமான வெளிப்பாடாகின்றன.

மரணம் பரிசளிக்கப்பட்டு
மடிந்தவர்கள் எவராயுமிருக்கட்டும்....
மரணத்தை வழங்கியோர்கள்,
எவராயும் இருக்கட்டும்.... என் கண்ணில்
தெறித்து விழும் இரத்தத்தால் திசையெல்லாம்....
சிவப்பாகக் காண்கின்றேன்...."

என்று இனமதபேதமற்று, மரணித்தவர்களுக்கான அஞ்சலிப் பூக்களைக் கவிதை சொரிகிறது. இதே உணர்வுகளைத்தான் போதிமரத்திலும் தரிசிக்க முடிகிறது.

தொடர்ந்தும் போர் அழுத்தங்கள் நிறைந்த மண்ணில் சமாதானம் வேண்டும் என்ற ஆவலோடு சமாதானப் புறாவுக்கான 'உருவேற்றல்' நிகழ்கிறது. அதற்காக எல்லோரும் அந்த வெண்புறாவுக்கு உயிர் கொடுக்க வேண்டும் என்று அங்கலாய்க்கும் கவிதை உள்ளம் 'ஊர்வலத்'தில் சமாதான தேவதையின் அவசர அலங்காரம் கண்டு மிரள்கிறது. அரிதாரப் படை யெடுப்போடு, நொண்டி நடப்பதனை மறக்க, குதியுயர்ந்த பாத அணி பூட்டி வருகின்ற சமாதான தேவதைதானும் ஒரு கையசைத்துக் கடந்து போகிறாள் என்கின்ற போது அந்தக் கனவு கலைகிறது.

இருப்பினும் புதிதாய் மலர்ந்த ஆறு, "இனி எந்தப் பெருங்கோடை வந்தாலும் வற்றேன் யான்...." எனக் கரைபுரளக் கடக்கும் போது, கலைந்த கனவு நம்பிக்கையோடு வேர் கொள்கிறது.

வீட்டுச் சுவரின் வீசலில் துளிர்த்த வேர் பற்றிய கவிதை மனதைத் தைக்கிறது. ஆலவிதை பச்சைத் தளிர்க்கரம் ஆட்டும்போது மனம் போல் வளரவிட்டு, அதன் செழிப்பை ரசித்துவிட்டுப் பின், அதன் வேர் அறுத்த கதையை இப்படிச் சொல்கிறார் கவிஞர்.

"அன்பாய் அது என்னை அருகழைக்கும் போதெல்லாம்
முன்போற் சிரியாமல்
முகம் திருப்பிச் சென்றேன்... பின்
'பாவ'மென்று பாராமல், சுவர்ப்பிளவில் வேர்தேடி
வெட்டி அறுத்திழுத்தேன்!"

வாழ்வின் யதார்த்தம் வேரென வெளிப்படுகிறது. இப்படி வாழ்வில் எத்தனை வேர்களைத்தான் அறுத்திழுத்திருப்போம்....?

'குயிலி' மனதில் பாரத்தைத் தந்து போகும் கவிதை. ஏக்கம் குழைத்த ஒன்றைக் குரலோடு, யாரோ ஒருவனின் போலிக் கூவலை, இணையு டையதென நம்பிக் குரல் கொடுக்கும் குயிலி... ஏமாந்து போன அந்த இளங்குயிலின் அழைப்பு....

"இன்றைப்போல இனிநாளும்,
எங்கோ இதேகுயிலி ஏங்கிக் குரல்
கொடுக்கும்..
அங்கங்கு ஏமாற்றந்தானா
அதை அணைக்கும்....?

இந்த வேதனை வரிகளால் குயிலியின் சோகம் தீர்ந்து போகுமோ...? இல்லை... மேலும் மெருகுமோ.....?

மரங்களைப் பற்றிப் பேசும் கவிதை அற்புதமாய் அமைந்துள்ளது.

"மழைநாளில் மட்டும் மணியாய்க் குறித்தடுத்த
மலை மட்டும் ஊத்தை அகலாதிருக்கின்ற.... மரங்கள்....
"யார் பூப்பறித்தாலும்,
யார் கிளை முறித்தாலும்,
யார் வேர் அறுத்தாலும் எதிர்ப்பெதுவும் காட்டாமல், பேசாமடந்தையாய் வலிசுமந்து வீழுகின்ற.....

அந்த மரங்கள் கவிஞரின் வரிகளுக்குள்தான் ஆறுதல் கொள்கின்றன. அதனால் தானோ சில்லென்ற காற்றை சிறுவனைப் போல் விசிறி கவிஞருக்கு 'அறிவு நட்பு' ஆகிவிட்டன.

'நாய் பிடித்தல்', தம் ஊரின் ஒரு காலச் சித்திரத்தை அப்படியே பதிவு செய்கிறது.

"ஊர் நாயை,
வீட்டுக் கொளித்தோடிச் சுதந்திரமாய்
தன்பாட்டிற் சுற்றும், தறுதலையாம் நாய்களினை
சின்னஞ்சிறு குட்டிகளை
சுருக்கிட்டுப் பிடித்துக்
கொண்டு சென்றடித்துக் கொல்வார்கள்
விசர் நாய்தான் என்றல்ல பிடித்ததனை அழிப்பார்கள் என்றும்....
"விட்டேத்தியாகத் திரிந்து பிடிபட்டால்.
அதன் நெற்றிப்
பொட்டில் மரணம் பொறிக்கப்படும் என்றென்
நாய்க்கு விளங்காது..."

என்றும் நாய்பிடித்தலினூடாக அன்றைய சூழலைச் சொல்லவிழைகிறார் கவிஞர்.

மேலும் உறவு, நீ இட்டசாபம் போன்ற கவிதைகள் ஐந்தறிவு ஜீவன்களுக்காக ஏங்கி நிற்கின்றன. 'கார்த்திகை மழை' கார்த்திகைத் தீபங்களைக் கண்களுக்குள் கொண்டு வந்து கண்கலங்க வைக்கிறது.

உலகத்திலுள்ள பாதைகளைப் பற்றி ஆராயும் கவிஞரின் நோக்கில்

"நம் பாதையினைத் தெரிவு செய்தல்
மட்டும் நம் கைகளிலே...
பயணம் யார் கையில்....?

என்பதாய் ஏற்படும் தெளிவு இன்னொரு கவிதையில் வாழ்வை பயணத்தோடு ஒப்பிடுகிறது.

"வாழ்வு அதன் மீது வலிந்து எழும் சந்தேகம்.
ஏதோ பயம், ஏதும் நிரந்தரமே இல்லையென்ற
நம்பிக்கையீனம்...."

இவை தன்னுள் புற்றுநோயாய் வளரினும்,

'கவிதை துணையிருக்கக் கலங்கி மரணிக்கேன்...' என்று தீப்பொறிகளைத் திரட்டியெழ முடிகிறது. கவிஞரால் நல்ல உணர்வுகளை, நல்ல மன நினைவை இணைக்கும் இயற்கை இறை நல்லதொரு வாழ்வருளும்' என்று நம்பவும் முடிகிறது.

இயற்கை அழகின் மயக்கத்தில் அழகழகான உவமைகள் கவிதையெங்கும் எட்டிப்பார்க்கின்றன.

"சூரியனின் விழியை முகிற்கரங்கள்
பொத்தி மறைத்து வைத்த பொழுது..."
"வெய்யில் விழுது விடுங்காலை...."
"தடிமன் பிடித்தொழுகும் மூக்காய்த்
தரை நோக்கி
மழை சிந்தும்...."

இவ்வாறு வார்த்தைகள் வானவில்லின் வர்ணஜாலம் காட்டுகின்றன.

"காலம் நெடும்பாய்ச்சல் பாய்ந்த பின்னும்....
கோவிலடி வீதி, கொற்றக்குடை நிழலாய்
ஏதோ பரவசத்தை
எமக்கூட்டும் அன்னைமடி....."

என ஆறுதல் காணும் கவிஞரிடம் ஆண்டவன் கேட்கிறான் "தான் அங்கில்லை... ஏன் பின் இடிபட்டாய்...?" என்று.

'யாரோ ஒருத்தி'யின் அருட்கண் பார்வையால் உயிரமைதி கிடைக்கும் என்பதற்காக, ஆண்டவனைக் கோவிலில் இல்லை என்று சொல்ல வைப்பது அவ்வளவு நல்லதாயில்லை. இறைவனைத் தேடிக் கோவிலுக்குப் போகும் பக்தர்கள் நிலையையும் கவிஞர் யோசிக்க வேண்டும்.

மொத்தத்தில், எளிமையும், இனிமையும் சேர்ந்த கவிதைகள் ஷகைகளுக்குள் சிக்காத காற்றாகி' மனதுக்குள் சாமரம் வீசிக் கொண்டிருக்கின்றன.

-தாட்சாயணி.

# தெரியாமல் போன தவறு

எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை
நேற்றுப் போல்தான்
இருக்கிறது
காற்றும் சொல்லவில்லை
மண்ணும் அறிவிக்கவில்லை
கடலும் ஆர்ப்பரிக்கவில்லை
அவற்றுக்கும்
தெரிந்திருக்கவில்லை
எங்களையும் மீறி
எல்லாவற்றையும் மீறி
எந்தச்சத்தமும் இல்லாமல்
ஆரவாரம் போடாமல்
தவறு நடந்துவிட்டது
என் தந்தை
கல்பிரட்டி செடிவெட்டி
செப்பனிட்ட பாதை அந்த ஊர்
தொடக்கம் வயல்கள் பார்த்திருக்க
முடிவு கடல் பார்த்திருக்கும் பாதை.
விடுமுறைகளில்
அங்கும் இங்குமாய்
காலடி மண் நழுவ ஓடினோம்,
வெண்மணல் காற்றில்
பறக்க விளையாடினோம்
கடலலை துளி
சிதறக் குளித்தோம் - பின்
குழிதோண்டி குச்சி பரப்பி
சருகு மறைதது காத்திருந்தோம்
முயல்பிடிக்க
சிப்பிகளுடன்
பாலப்பழக்கொட்டைகளையும்
சேமித்தோம்.
பண்டி சுட்டு
இறால் பொரித்து
தயிருடன் தேன் சேர்த்துண்டோம்.
ஆனால்,
எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை
காற்றும் சொல்லவில்லை
மண்ணும் அறிவிக்கவில்லை
கடலும் ஆர்ப்பரிக்கவில்லை
அவற்றுக்கும் தெரிந்திருக்கவில்லை.
ஓடிய போதும்
விரட்டப்பட்ட போதும் கூட
எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை
காற்றுக்கும் மண்ணுக்கும்
கடலுக்கும் கூடத்
தெரிந்திருக்கவில்லை
அப்போதெல்லாம்
மனிதர்கள் மட்டும் தான்
காணாமல் போனார்கள்.
அதனால்
அதைத்தான் கதைத்தோம்
பேனா கொண்டு எழுதினோம்
கூடியிருந்து சிந்தித்தோம்
யாருக்குத் தெரியும்?
எங்களையும் மீறி
எல்லாவற்றையும் மீறி
எந்தச் சத்தமும் இல்லாமல்
ஆரவாரம் போடாமல்
தவறு நடக்கும் என்று
என் தவறா?
உன் தவறா?
எங்கள் தவறா?
ஊர்களும் காணாமல் போகுமென்று
தெரியாமல் போனது

- துளசி

அரசியல் நோக்கு

கே.ரீ.கணேசலிங்கம்

# உலகப் பொருளாதாரத் தடத்தில் புதிய அத்தியாயத்துடன் ஜி.8 நாடுகள்




வளர்ச்சியடைந்த நாடுகள் (G.8) கூட்டம் அமெரிக்க மாநிலங்களில் ஒன்றான ஜோர்ஜியாவில் (Georgia) நடந்து முடிந்துள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், பிரிட்டன், கனடா, ஜேர்மனி, இத்தாலி, ரஷ்யா ஆகிய எட்டு நாடுகளின் தலைவர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஈராக் அரசியல் தீர்வு பற்றிய சர்ச்சையில் இரண்டுபட்டிருந்த வளர்ச்சியடைந்த எட்டுநாடுகளும் உடனடியாகவே ஐக்கியமடைந்துள்ளதை இந்த மாநாடு நிறுவியுள்ளது. நாடுகளதும் அதன் தலைமைகளதும் இத்தகைய நடவடிக்கை எல்லை தாண்டமுடியாத ஐக்கியத்தை வெளிப்படுத்தியுள்ளது. இந்தநாடுகளுக்கிடையே காணப்படும் முரண்பாடுகளுக்கு எல்லை உண்டு. அதனை மீறி எந்த வளர்ச்சி அடைந்த நாடும் இன்னோர் நாட்டின் மீது நடவடிக்கை எடுக்கத் துணிவதில்லை என்பதே யதார்த்தமான வாதமாகும். இவற்றை விடுத்து G.8 மாநாடு முன்வைத்துள்ள கருப்பொருளையும் அதன் அரசியல் பரிமாணத்தையும் பரிசீலிப்போம்.

முதலாவதாக, உலகளாவிய ரீதியில் சமாதானப் பணிகளை ஆற்றுவதற்கான ஒரு சமாதானப் படையை நிறுவுவதென மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக ஆபிரிக்க நாடுகளில் சமாதானப் பணியை மேற்கொள்வதற்கு சுமார் 50 ஆயிரம் பேரடங்கிய படையணியைத் தயார் செய்வதாக அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

G.8 சமாதான அமைப்பொன்று நேட்டோ (NATO) அமைப்பும் 1949 களில் உருவாக்கப்படும் போது பொருளாதார இலக்கைச் சாத்தியப்படுத்தி அடைவதென்பதையே கருப்பொருளாக விளங்கியது. அத்தகைய பொருளாதாரக் கூட்டாக தொடங்கப்பட்ட நேட்டோ படிப்படியாக சமாதானப்படை பற்றிய கருப்பொருளை 1953 களில் சேர்த்துக் கொண்டது. பின்னர் அத்தகைய சமாதானப் படை என்பது வோர்சோ என்ற சோவியத் தலைமையிலான சோஸலிச இராணுவக் கூட்டமைப்புக்கு பின்பு திடீரென இராணுவக் கூட்டாக விஸ்தரிப்படைந்தது. பின்னர் இன்று வோர்சோ கலைக்கப்பட்ட பின்பும் ஒரே ஒரு இராணுவ முகாந்திர அமைப்பாக நேட்டோ விளங்குகின்றது.

எனவே G.8 அமைப்பின் சமாதான படை உருவாக்கம் என்பது சில சந்தேகங்களைக் கிளப்புகின்றது. இச்சமாதானப்படை UNO சமாதானப்படைக்கு விதிவிலக்கானதா? அப்படியாயின் இது சாதிக்கப்போகும் அம்சம் எதுவாக உள்ளது. சில வேளைகளில் G.8 இன் அமைப்பு UNOவை ஓரங்கட்டிவிட்டு சில முன்னெடுப்புக்களை தனித்து எடுக்க முயலுகின்றதா?

ஆபிரிக்காவை ஒரு பரிசோதனைக்களமாகக் கொண்டு முழு உலகத்தையும் G.8இன் ஆதிக்கத்திற்குள் உள்ளடக்கப் போகின்றதா? என்ற கேள்விகள் எழவாய்ப்புண்டு. அமெரிக்கா தன்னை எதிர்க்கும் சக்திகளின் வலுவை ஒன்றிணையவிடாது முயற்சிப்பது போன்றும் இந்நகர்வு அமைந்திருக்கிறது. இது வெளிப்படையாக புலப்படாது விட்டாலும் பிரான்ஸ், ஜேர்மனியின் தனித்துவ ஐரோப்பிய நாடுகளுக்குள் அமெரிக்காவுக்கு எதிராக எடுத்து வரும் நடவடிக்கையை முறியடிப்பதற்கான தந்திரமாகவும் அமையலாம்.

ஆனால் இவ்வாறான நகர்வுகள் மிகத் தீவிரமான மாறுதலையும் ஏற்படுத்தி வருவதனை கடந்த காலங்களில் உருவான அமைப்புக்களிடம் காணலாம். எதுவாயினும் G.8 தலைவர்கள் உலகத்தை மிரட்டலுக்குட்படுத்தும் காலம் வெகுவிரைவில் சாத்தியமாகும் என்பதையே உணரமுடிகின்றது.

மேலும் நேட்டோவுக்குள் ஏற்பட்டுவரும் விஸ்தரிப்பு வடஅத்திலாந்திக் சமுத்திரநாடுகளையும் கடந்திருப்பதுடன் அதற்குள் ஏற்பட்டுவரும் இயல்பான மாறுதலும் வலிந்து (USA ஆல்) உருவாக்கப்படும் மாறுதலுக்கும் இடையில் ஏற்பட்டுவரும் முறுகல் என்பவற்றை கடந்ததொன்றாக G.8 சமாதானப் படை அமையவுள்ளது. ஆனால் நேட்டோவுக்குள் இருக்கும் அனேக நாடுகளே G.8 சமாதானப்படைக்குள்ளும் உட்படுகின்றன என்பதையும் மறுக்கமுடியாது. அவ்வாறே சமாதானப்படையின் பெயரால் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்களையும் நினைவுபடுத்துதல் வேண்டும்.

இரண்டாவது, மேற்காசியப் பிராந்திய நாடுகளின் ஜனநாயகத்தை மேம்படுத்துவதென G.8 நாடுகள் தீர்மானம் ஒன்றை வலியுறுத்தியுள்ளது. இத்தகைய ஜனநாயகமயவாக்கம் என்பது அமெரிக்காவின் பூரண விருப்பத்துடன் சாத்தியப்படாது விட்டாலும் G.8 நாடுகளின் விருப்பத்தோடு நிறைவேறியுள்ளது. அதனால் வளர்ச்சியடைந்த நாடுகளின் ஜனநாயகமயப்படுத்தலே சாத்தியமான மாறுதலை மேற்காசியாவில் ஏற்படுத்தவல்லது என்பது நிருபனமாகின்றது. ஆனால் மேற்காசியாவில் வளர்ந்துள்ள இஸ்லாமிய அரசியல் பரிமாணமும் அது சார்ந்த இராணுவ அல்லது முடிசார்ந்த ஆட்சியுரிமையும் உடைக்கப்படுவதென்பது வளர்ந்த நாடுகளின் ஜனநாயக அம்சங்களால் சாத்தியமாக்க முடியாததென்றாகும். வளர்ந்த நாடுகளின் அரசியல் மாறுதலுக்கு பின்னால் மறைந்துள்ள நலன்களும் சுரண்டல்களும் அபாயமான விளைவுகளை ஏற்படுத்திவருகின்றன. மேலும் மேற்காசியாவில் வன்முறை நிகழ்த்தப்படுதேயன்றி ஜனநாயக பூர்வமான வளர்ச்சி ஏற்படவில்லை. ஏன் ஏனைய பிராந்திய நாடுகளில் வளர்ந்த நாடுகள் அமுல்படுத்திய ஜனநாயக சாதனங்கள் கேலிக்கூத்தாகிவருகின்றன. நாடாளுமன்றத்திலேயே கொலைகளும், மிரட்டல்களும், துன்புறுத்தல்களும் நிகழும்போது அதனை ஜனநாயகமென எவ்வாறு குறிப்பிடுவது.



மாநாட்டுக்குச் செல்லும் பாதையை அலங்கரிக்கும் தேசியக் கொடிகள்



மாநாட்டில் அமெரிக்க அதிபர் புஷ், ரஷ்ய அதிபர் புடின் ஆகியோர் தமது மனைவிமாருடன்

இஸ்லாமிய அடிப்படைவாதம் முன்னெடுத்துவரும் தீவிர இராணுவ நகர்வுகள் பாதுகாப்பற்ற பிரதேச சூழலை ஏற்படுத்தியுள்ளது. அதனால் ஜனநாயக மேம்பாடு என்பதற்கான அணுகுமுறை மாதிரி ஏனைய பிராந்தியங்கள் போல அமையுமாயின் மேற்காசியாவில் சாத்தியப்படுத்த முடியாததொன்றாக விளங்கும். ஆனால், உலகத்தின் ஜனநாயகத்தை உயர்வாக மதித்துக் கருத்துக்கூறும் புத்திஜீவிகளுக்கும், நம்பிக்கையையும், வலுவூட்டலையும் ஏற்படுத்தவே G.8 நாடுகள் இத்தகைய அழுத்தத்தை ஜனநாயகத்திற்கு வழங்கியுள்ளனர். ஜனநாயகம் என்ற எண்ணக்கரு கறுப்பினத்தவர்களுக்கு என்றோ, வெள்ளைக்காரர்களுக்கென்றோ உருவாக்கப்பட்டதல்ல.

மூன்றாவது, விடயமாக முதன்மைப்படுத்தப்பட்டது ஆபிரிக்கநாடுகளது கடன் சுமையிலிருந்து விலக்களித்து அவற்றுக்கு நிவாரணமளிப்பதாகும். நல்லதிட்டம். ஆபிரிக்க ஆட்சியாளர்கள் மட்டுமன்றி மக்களின் மாறுதல்களுக்கும் இத்திட்டம் வலுச்சேர்க்கக் கூடியது. ஆனால், ஆபிரிக்கர்களின் வறுமைக்கு வித்திட்டவர்கள் கறுப்பர்களா? அல்லது வெள்ளையினத்தவரா என்பது முக்கிய வினாவாகும்.

சுதந்திரமாக வாழ்ந்த கறுப்பர்களை அடிமையாக்கி மிருகங்களுக்கு ஒப்பானவர்களாக மாற்றியது ஐரோப்பியர்கள். தமது நலன்களுக்காக கறுப்பர்களின் இருப்புக்களை அழித்தவர்கள் உடற்பலத்தையும், உத்வேகத்தையும் கண்டு அச்சமடைந்த வெள்ளையர்கள் கறுப்பர்களை அடிமையாக்கியதுடன், கொடிய நோய்களுக்கும், வறுமைக்கும் உள்ளாக்கும் விதத்தில் ஆபிரிக்காவின் இயற்கையைச் சிதைத்தார்கள்.

அதுமட்டுமல்ல மனிதநேயம், மனித உரிமை, சுதந்திரம் என்பன எல்லாவற்றையும் உலகம் முழுவதும் அறிமுகப்படுத்திய ஐரோப்பியர்கள் ஆபிரிக்காமீது அவற்றை பிரயோகிக்கவோ, அமுல்ப்படுத்தவோ விரும்பவில்லை. மிக அரிதாகப் படிப்படியாக அவற்றை அவர்களது சட்டப்புத்தகங்களுக்கு மட்டுமுரியதாக மாற்றினார்கள்.

அதுமட்டுமன்றி பொருளாதார சுரண்டலைத் திட்டமிட்டு மேற்கொண்டு கடன் சுமையை ஏற்றினார்கள். தற்போது விலக்களிக்கப்பட்ட நிவாரணத்திட்டத்தின் பின்பும், வழங்கப்படும் கடன்களின் 80 சதவீத வருமானத்தைச் சுரண்டுபவர்களாக வெள்ளையர்கள் விளங்குவார்கள்.

G.8 மாநாட்டில் தனித்து வெள்ளைக்காரர் அந்தப்பணியை ஆற்றுவது மட்டுமல்ல. கறுப்பர்களான சீனர்களையும், இந்தியர்களையும் அழைத்துள்ளனர். அதாவது கறுப்பர்கள் கறுப்பரைச் சுரண்டுதலை அறிமுகம் செய்ய G.8 நாடுகளின் தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

நான்காவதும் இறுதியுமான அம்சம் G.8 G.10 ஆக மாற்றுவதாகும். இம் மாநாடு தொடங்கிய கையோடு இந்தியாவையும், சீனாவையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென இத்தாலி வலியுறுத்தியது. இதனை ரஷ்யா, பிரான்ஸ் என்பன ஆமோதித்தன. அது மட்டுமன்றி சீனாவையும் இந்தியாவையும் விட்டுவிட்டு உலகப்பொருளாதாரத்தை கட்டி வளர்க்க முடியாதென இத்தாலியப்பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த நாடுகளிடம் நல்ல சந்தைவாய்ப்புண்டு. போதிய வர்த்தக முயற்சிகளையும் முதலீடுகளையும் முதலீடு செய்வதுடன் அதிக இலாபத்தைப் பெறலாம் என்பதை வலியுறுத்தும் மாதிரியே இத்தாலியப் பிரதமரது உரை அமைந்திருந்தது. ஆனால் இந்த நகர்வு பெரிய மீனுக்கும் சிறிய மீனுக்குமான சண்டையாக வேமுடியும். அது மட்டுமன்றி கைத்தொழில் நாடுகளுக்கும், விவசாய நாடுகளுக்குமான மோதல் வலுவுடைய கைத்தொழில் நாடுகளையே தற்போதைய வர்த்தகக் கொள்கை பாதுகாக்கும். அத்தகைய அணுகு முறைகள் சாத்தியப்பாடானதாக மாறவேண்டுமாயின் சரியான திட்டமிடலும் உத்தியும் அவசியமானது. இது சீனாவுக்கு அதிக வாய்பபுக்களை இந்தியாவுடன் ஒப்பிடும் போது கொடுக்கக்கூடியது.

ஆனால் இவ்விரு நாடுகளையும் உலகம் மாறுதலடைய அரசுகளாக ஏற்றுக்கொண்டுள்ளன என்பது உறுதியாகிறது. ஒரு வகையில் இந்த நாடுகளது வளர்ச்சி போதாதிருந்த போதும் தமது நலனுக்கு சாதகமானவையாக இவை காணப்படுவதால் அவ்அங்கீகாரம் நிகழ வாய்ப்புண்டு. இது எதிர்காலத்தில் சாத்தியப்படுமென நம்பமுடியும்.

எனவே G.8 நாடுகள் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளன. பொருளாதார எழுச்சிக்குப் பக்கபலமாக இராணுவ உந்துதல் புதிய உலகத்திற்கு அவசியமானதென்பதுடன் ஜனநாயகமும் சுரண்டலுக்கு அடிப்படை அம்சம் என்பதனை ஜோர்ஜிய மாநாடு உணர்த்தியுள்ளது.



மாநாட்டுப் பாதுகாப்பு அளிக்கும் ஹெலி

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சாத்தான் வேதம் ஓதுகின்றதா?

'விடுதலைப் புலிகளுடன் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க முடியுமானால் அத்தகைய பேச்சுக்களை முன்னெடுக்க நாம் தயாராக இருக்கிறோம'

இந்த வார்த்தைகளைக் கூறியவர் வேறு யாருமல்ல நாடாளுமன்ற உறுப்பினரும், ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளருமான அதுரலிய ரத்ன தேரர் என்ற பௌத்த பிக்குதான். இதுதான் ஆச்சரியமான விடயமாகும்.

'பௌத்தர்கள் என்ற வகையில் அத்தகைய பேச்சு வார்த்தைகளை பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற நோக்கில், நாம் புலிகளுடன் பேசத்தயாராகவுள்ளோம். எந்தப் பிரச்சினை குறித்தும் எவருடனும் நாம் பேசத்தயார்' என அவர் தமது நிலைப்பாட்டை கொழும்புச் செய்தி ஊடகம் ஒன்றுக்கு வெளிப்படையாகத் தெரிவித்துள்ள தேரர் 'நாம் நிபந்தனைகளுக்குட்பட்டுப் பேசமாட்டோம்...' என்றும் கூறியுள்ளார்.

தேர்தல் முடிந்து, நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளாக ஒன்பது பௌத்த பிக்குகளை ஒரே தடவையில் முதன் முறையாக அனுப்புவதில் வெற்றிகண்ட ஹெல உறுமயவின் அரசியல் நுழைவு, பௌத்த சிங்கள இனவாத தத்துவத்தின் அடிப்படையிலானதாகும். அதுமட்டுமல்ல அதன் முன்னைய பெயரான சிஹல உறுமய என்பது அதே பேரினவாதத்தின் வெளித்தனமான கோட்பாடுகளின் அடையாளமுமாகும்.

முன்னைய நாடாளுமன்றத்தில் வெறும் - ஒரே உறுப்பினரை மட்டும் பெற்றிருந்த சிஹல உறுமய, ஆழ்ந்த உள் நோக்குடன் கடந்த தேர்தலில் புதிய மூலோபாயமொன்றை பௌத்த சிங்கள மக்களின் உணர்வுகளைத் தாக்கும் வண்ணம் வகுத்தபோது, அது ஹெல உறுமயவாக பெயர்மாற்றம் கண்டதுடன், அதன் வேட்பாளர்களாக பௌத்த துறவிகள் தேர்தலில் நிறுத்தப்பட்டனர் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது, இந்த பௌத்த குருமாரான ஹெல உறுமயவின் வேட்பாளர்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமல்ல, முழுச் சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிராகவே பிரசாரம் செய்யக் களத்தில் இறங்கினர்.

அவர்கள் அமெரிக்காவை, ஜப்பானை, பிரிட்டனை, நோர்வேயை மட்டுமல்ல இலங்கையின் இனப்பிரச்சினை சுமுகமாக அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதன் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என விரும்பும் சர்வதேச நாடுகள் அனைத்தையும்கூட அவமதித்தனர், எதிர்த்தனர், அவர்கள் சமாதான முன்னெடுப்பு ஆதரவு முயற்சிகளை பகிரங்கமாகவே நிராகரித்தனர்.

'ஹெல உறுமய' என்ற மாறுநாமப் பின்னணியில் இயங்கியவர்களான 'முன்னாள' சிஹலஉறுமயக்காரர்களான திலக் கருணாரத்ன, சம்பிக்க ரணவக்க போன்றோரின் இனவாதக் கோட்பாட்டுடன் கூடிய இலக்குகளை தம்சொந்த முகங்களுடன் எட்டமுடியாது போன பின்னரே பௌத்த துறவி முகத்தவர்களை களத்தில் இறக்கினர்.

அது அவர்களுக்கு சாதகமான வெற்றியைக் கொடுத்தது. காவி அங்கி அல்லது மஞ்சள் அங்கி அணிந்தோரின் 'தர்ம ராஜ்ஜியக்குரல்' பேரினவாத ஆதரவுச் சக்திகளின் மனதில் ஒரு கனவுலகை கற்பனை செய்ய வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதன் வெளிப்பாடாக அரசாங்கத்தையே ஆட்டிப்படைக்க வல்ல நவக்கிரகங்களான ஒன்பது பிக்குகள் நாடாளுமன்றம் புகும் ஒரு வரலாற்று நிகழ்வு உருவானது. ஆனால், தர்ம ராஜ்ஜியக் கோட்பாட்டாளர்களின் நாடாளுமன்றத்துக்கான முதல் நுழைவே அதர்ம ராஜ்ஜியத்துக்குள்ளான நுழைவாக மாறிய அவலம் அவர்களுக்கு மறக்க முடியாத அனுபவமாகியது.

பௌத்த துறவிகளுக்கு நாடாளுமன்றத்துக்கு வெளியே சிங்கள - பௌத்த அரசியல்வாதிகள் வழங்கும் கௌரவமும், மதிப்பும் வெறும் போலித்தனமானது, சம்பிரதாயத்துக்கான நடிப்பே அது என்பது, நாடாளுமன்றத்துக்குள் அவர்களுக்கு, கிடைத்த 'சிறிலங்காவின் ஜனநாயக தர்மத்தின் பாணியிலான்' வரவேற்பு உபசாரத்தின் உத்வேகம் வெட்டவெளிச்சமாக்கியது.

அது தர்ம ராஜ்ஜியக் கோட்பாட்டாளருக்கு கிடைத்த அரசியல்த் தோல்வி மட்டுமல்ல, அரச அவமதிப்பும் கூட...

அதனை ஏற்பதும், எதிர்ப்பதும், அவர்கள் பிரச்சினை. அது கிடக்கட்டும் ஆனால், ஜனாதிபதி தவிர்க்கவே முடியாத அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழலில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நகர்வுக்காக நோர்வேயின் அனுசரணையை மீண்டும் கோரியபோது அதனை எதிர்த்தது ஜே.வி.பி மட்டுமல்ல... ஹெல உறுமயக்காரரும் தான்.

முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் சமாதான முன்னெடுப்புகள் ஆரம்பமானபோது இனப்பிரச்சினை உட்பட சகல பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையுடனும், விருப்புடனும் தான் ஆரம்பிக்கப்பட்டபோதும் அதனையும் முதலில் கடுமையாக எதிர்த்தவர்கள் ஹெல உறுமயவின் முற்பிறப்புக்களான சிஹல உறுமயக்காரர்கள்தான்.

சிஹல உறுமயக்காரர்களாயினும் சரி அவர்களின் தற்போதைய நிழல்களான ஹெல உறுமயக்காரர்களாயினும் சரி, சமாதான நடவடிக்கைகளாயினும், விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் முரண்பாடான கொள்கைகளைக் கொண்டவர்களாகவே சமீபகாலம் வரை இருந்து வந்துள்ளனர்.

இந்தநிலையில் - விடுதலைப் புலிகளுடன் ஹெல உறுமயவினர் பேச்சுவார்த்தைகளை நடத்திப் பிரச்சினைகளைத் தீர்க்கத் தயார் என்று திடீரென்று கூறியுள்ளமையானது, 'சாத்தான் வேதம் ஓதுகிறது' என்ற முது மொழியைத்தான் நினைவுபடுத்துகிறது.

## நாடும் நடப்பும்




# வடக்கு - கிழக்கில் நிலவும் நெருக்கடி தேசிய பிரச்சனையாக உருவெடுக்கிறது

## அமைச்சர் டி.எம்.ஜெயரத்தன தெரிவிப்பு

வடக்கு - கிழக்கில் நிலவிவரும் நெருக்கடி நிலைமை தற்போது நாட்டின் தேசிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் அரசியல் பேதங்களைக்களைந்து விட்டு முன்வர வேண்டும் என அமைச்சர் டி.எம். ஜெயரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தெற்கிலிருக்கும் அரசியற்கட்சிகள் புத்திசாதுரியத்துடன் செயற்பட வேண்டும். வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் தெற்கில் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

அரசியற்கட்சிகள் தமது கொள்கைகளை நிறைவேற்றப் பாடுபடுவது போல், நாட்டின் எதிர்கால பாதுகாப்பைப் பலப்படுத்த முன்வர வேண்டும் அரசியல் இலாபத்திற்காக நாட்டின் நலனைப் பாதிக்கும் வகையில் உரையாற்றக் கூடாதெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# தமிழரையும் புலிகளையும் வேறுபடுத்தியதாக இந்திய அரசின் இலங்கை கொள்கை அமையும்

## இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி

விடுதலைப் புலிகள் வேறு, தமிழ்மக்கள் வேறு என்ற அடிப்படையில் இந்தியாவின் புதிய அரசின் இலங்கை தொடர்பான கொள்கை அமையும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பில் கொழும்பு அரசுடனான புதுடெல்கியின் ஈடுபாடு அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா பாரியபங்களிப்பை வழங்கவுள்ளமை அதன் பல சமிக்ஞைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் இந்தப் பங்களிப்பு புலிகளுக்கு ஆதரவாக அமையாது. ஆனால் பலதரப்பட்ட அழுத்தங்களின் மூலம் கொழும்பு அரசை தமிழ் மக்களின் அபிலாஷைகளில் கரிசனை காட்டுவதற்கு புதுடெல்கி முயற்சிக்கக்கூடும்.

உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் இலங்கை - இந்தியா இரு நாடுகளுக்கும் இடையில் இராணுவ உதவியை வலுப்படுத்த உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விறகுவெட்டச் சென்றவர்களின் சைக்கிள்கள் பறிமுதல்

மட்டக்களப்புப் பகுதியில் விறகுவெட்டச்சென்ற எட்டுப் பேரின் சைக்கிள்களை ஆயுதம் தாங்கிய இளைஞர் குழுவொன்று மிரட்டிப்பறித்துச்சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விறகுவெட்டச்சென்ற எட்டுப் பேரும் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - மட்டக்களப்பு, வாழைச்சேனை போதாதை காட்டுப்பகுதியில் விறகுவெட்டச்சென்ற எட்டு நபர்களை துப்பாக்கி, கைக்குண்டு என்பவற்றைக்காட்டி 4 நபர்கள் மிரட்டி இவர்களின் சைக்கிள்களைப் பறித்துவிட்டு அவர்களைத் துரத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தனியார் வைத்தியசாலைகளும் அரசின் கண்காணிப்பின் கீழ்!

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள தனியார் வைத்தியசாலைகளின் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடவுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தகவல் வெளியிடுகையில்-

மிகவும் போட்டி நிரம்பிய இந்தத்துறையில், மக்களுக்கு நல்ல வைத்திய வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

தெற்காசியாவில் நல்ல சுகாதார வசதிகளைக் கொண்டிருக்கும் முன்னணி நாடாக இலங்கை விளங்குகின்றது. ஆனாலும், அரச வைத்தியசாலைகளும், தனியார் வைத்தியசாலைகளும் நெருங்கிச் செயற்பட வேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையில் மார்பு நோய் சத்திரசிகிச்சை பிரிவைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

# பெரும்பான்மை இனச் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்

தற்போது இலங்கையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிறுவர்கள் பெருமளவில் வேலைக்கு அமர்த்தப்படுவதாக அண்மைக் காலங்களில் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரியவருவதாக தேசிய சிறுவர்பாதுகாப்புச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

வர்த்தக சமூகத்தினர், நில உரிமையாளர்கள், வைத்தியர்கள் போன்றோரே சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர். தற்போது சிறுவர்களை வேலையில் அமர்த்துவது தொடர்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவர தேசிய சிறுவர் பாதுகாப்புச்சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் ஆயிரம் குடும்பங்களை ஆய்வு செய்தமையினாலேயே இந்தத் தகவல் கிடைத்துள்ளது.

# தென்மராட்சி உயர்பாதுகாப்பு வலயத்துள் மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

தென்மராட்சிப் பகுதியில் 2000ஆம் ஆண்டு பாதுகாப்புப் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட 11 கிராமங்களில் மக்களை மீளக் குடியேற்றுவதற்குப் படை உயர் அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

இதன் முதற்கட்டமாக உயர் பாதுகாப்புப் பிரிவு அலுவலகத்தில் படைதரப்பினருக்கும், தென்மராட்சி பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள் ஆகியோருக்குமிடையே நடைபெற்ற கூட்டத்திலே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பலாலி, கொடிகாமம் வடக்கு, உசன், கரம்பகம், விடத்தற்பளை, எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள் தெற்கு, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு ஆகிய பகுதிகளிலேயே மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் பிரச்சினை

அறிதிரு

# அவலங்களுக்கு மத்தியில் வாழும் எழுவான்கரை, படுவான்கரை மக்கள்

அரச நிர்வாகிகள் அடிப்படை அபிவிருத்திகளைக்கூட சமமாக மேற்கொள்ளாததாலும் 12 ஆண்டுகால போராலும் மட்டக்களப்பில் தமிழ்க்கிராமக்கள் பலர் மிக மோசமாக நலிவடைந்திருக்கின்றனர்.

மட்டக்களப்பில் வாவி எனப்படும் கடலேரியாலும் வங்கக்கடலாலும் சூழப்பட்ட நிலத்துண்டான எழுவான் கரையின் நகரமையமும் - அதனைச் சூழ்ந்த பகுதிகளுமே சகல அபிவிருத்தி நலப்பணிகளில் செறிவான பகுதியாக உள்ளது. நகருக்குத் தள்ளியுள்ள எழுவான

> மட்டக்களப்பில் கிராம மக்களுக்கான போக்குவரத்து ஏனோ தானோ பாணியிலேயே உள்ளது. இதனால் கால்நடைப் பயணமே அதிகமாகும். வாகரைப்பகுதி மீன்பிடித் தொழிலுக்கான மையமாக உள்ள போதிலும் அவர்களின் தொழில் விருத்திக்கு எதுவித உதவிகளும் செய்யப்பட வில்லை இதனால் வளமிகு கடலில் மீனவர்கள் அன்றாடம் காய்ச்சிகளாகவே உள்ளனர். வாகரையில் தற்போது கட்டப் படும் சுற்றயல் கூறுமருத்துவமனை, அரச கட்டடங்கள், தேவாலயங்கள் கோயில்கள் மற்றும் மக்களின் வசிப்பிடங்கள் கொட்டில்களும், அரைகுறை கற்கட்டிடங்களும் ஆகும். அமைதிக்காலத்திலும் எதுவித விருத்தியும் இவர்களிடம் இல்லை.

கரை கிராமங்களும், வாவிக்கு வெளியே மேற்புறத்தில் உள்ள படுவான்கரை கிராமங்களும், வடக்கே வாகரைப்பகுதியும் முற்றுமுழுதாக புறக்கணிக்கப்பட்டு பின்தங்கிய நிலையிலையே உள்ளன.இப்பகுதிக்ளில் மக்கள் மிக மோர்சமாக பொருளாதாரத்திலும், கல்வியிலும், சுகாதாரத்திலும் நலிந்து போயுள்ளது வாகரை படுவான்கரைப்பகுதிகளிலாகும்.

படுவான்கரையே மட்டக்களப்பின் அதிகூடிய பரப்பளவைக் கொண்ட பரந்த பிரதேசமாகும். நெல்விளையும் பெரும் வயற்பரப்புகளும், நீர்ப்பாசனத்திட்டங்களும், லட்சக்கணக்கான மாடுகளையும் கொண்ட வளமிகுபகுதிகளாக படுவான்கரை இருந்த போதும், அங்கு வாழும் மக்கள் எதுவித பொருளாதார வளர்ச்சியுமின்றியே உள்ளனர். கல்வி வளர்ச்சியும் கூட இங்கு இல்லை 90 விழுக்காட்டிற்கு மேல கொட்டில் வீடுகளே இங்கு மக்களின் வாழ்விடங்களாக உள்ளன. படுவான்கரை மக்களின் நிலையோ பரிதாபமாக உள்ளது. எத்தகைய கட்டுமானங்களையும் அரச நிர்வாகம் படுவான்கரைக்குள் கொண்டு வரவில்லை உதவி அரச அதிபர் அலுவலகர்கள் - எழுவான் கரைக்கு நெருக்கமாகவே அதாவது நகருக்கு கிட்டவாகவே அமைந்துள்ளன. 12 ஆண்டுகளாக போரில் படையினர் மேற்கொண்ட தடைகள். படை நடவடிக்கைகள் மக்களை மிக மோசமான நலிவுக்குட்படுத்தின. 02ஆண்டு கால அமைதியிலும் இம்மக்களின் நல மேம்பாடு என எதுவும் குறிப்பிடத்தக்க அளவு கூட செய்யப்படவில்லை. செங்கலடி பதுளை என்ற கொழும்பு பிரதான வீதி, வாழைச் சேனை, வாகரை வீதி என்பன மட்டுமே தார் போடப்பட்டுள்ளன. பதுளை வீதியின் முழுமையிலும் மின் வழங்கல் உள்ளது. ஆனால் மின்னைப் பெறுவதற்கு வீடுகள் தான் இல்லை.

அரச நிர்வாகிகள் எழுவான்கரை அதனை அண்மிய பகுதிகளைமட்டும் மையமாகக் கொண்டு அபிவிருத்தி, புனரமைப்புகளை முனைப்புப் படுத்தியே வருகின்றனர். படுவான்கரை, வாகரை பகுதிகளின் உட்புறப்பகுதிகளை இவர்கள் கவனிக்கவில்லை. படுவான்கரை, வாகரை பகுதியில் வாக்காளர்கள் குறைவாக இருப்பதால் கடந்தகாலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் இருந்த மட்டக்களப்பைச் சேர்ந்தோர் அதிக வாக்காளர்களை கருத்தில் கொண்டு நகருக்கே சகலதையும் வழங்கினர். அரச நிர்வாகிகளும் அதனையே தொடர்கின்றனர். தமிழர் தாயகத்தில் கூடுதல் பரப்பளவைக் கொண்ட மட்டக்களப்பில் புறக்கணிப்புக்குட்பட்டதாக பெரும் நிலப்பரப்புக்களான படுவான்கரை, வாகரை ஆகியன உள்ளன.

எழுவான்கரை நிலச்சொந்தக்காரர்களின் படுவான்கரை நிலங்களில் கூலிவேலை செய்பவர்களாகவே அவர்களின் வாழ்வு இன்றும் தொடர்கிறது. பால் வளம் அதிகூடியது மட்டக்களப்பு, படுவான்கரையே இதற்கான மாட்டு வளத்தை அதிகம் கொண்டது.

பால் பதனிடும் ஒருஆலையை இங்கு அமைத்து மக்களுக்கு பெரிய வேலைவாய்ப்பினை வழங்க



ஆலோசனைகள் வழங்கப்பட்டு வந்தும் கூட இதுவரை அது கருத்தில் கொள்ளப்படவில்லை. மலிவு விலையில் மக்களிடம் சுரண்டலாக பால் பெறப்பட்டு குருணாகல் கொண்டு செல்லப்பட்டு அங்கு அது பதனிடல் ஆலையை நிறுவுவதன் மூலம் படுவான்கரை மக்களுக்கு அபிவிருத்தியை கொடுக்க வாய்ப்பிருந்தும் அது நிராகரிக்கப்பட்டு வந்துள்ளது. இன்று வரை அம்மக்களுக்கான எந்த ஒரு அபிவிருத்தித் திட்டமும் இல்லை.

படுவான்கரை மக்களின் அவலம் இப்படியிருக்க எழுவான்கரையிலும் - நகருக்கு தெற்கேயும் - வடக்கேயும் உள்ள கிராமக்கள் பின தங்கியே உள்ளனர். நிறுவனங்களை அமைப்பதன் மூலம் கிராமங்களை விருத்தியடையச் செய்யலாம் என்ற நோக்கில் கிராமங்களான மஞ்சந்தொடுவாயில் தொழில்நுட்பக்கல்வியும், புதுக்குடியிருப்பில் கல்வியியல் கல்லூரியும், வந்தாறுமூலையில் பல்கலைக்கழகமும் அமைக்கப்பட்டுக்கூட அவற்றின் மக்களை மேம்படுத்த எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை. போக்குவரத்து இலகு காரணமாக இக்கிராமங்களில் அதிகாரிகள் தங்கியிருப்பதில்லை நகர் திரும்புபவர்களாகவே அவர்கள் உள்ளனர். இதைவிட கிராமங்களுக்கு ஒழுங்கான போக்குவரத்துக்களும் மேற்கொள்ளப்படுவதில்லை. இதனைச் சீர்செய்யவும் எவரும் முன்வந்து செயற்படவில்லை. போக்குவரத்துத் தொடர்புகள் மூலமே மக்களை மேம்படுத்த முடியும்.

ஆனால், மட்டக்களப்பில் கிராம மக்களுக்கான போக்குவரத்து ஏனோதானோ பாணியிலேயே உள்ளது. இதனால் கால்நடைப் பயணமே அதிகமாகும். வாகரைப்பகுதி மீன்பிடித் தொழிலுக்கான மையமாக உள்ள போதிலும் அவர்களின் தொழில் விருத்திக்கு எதுவித உதவிகளும் செய்யப்படவில்லை இதனால் வளமிகு கடலில் மீனவர்கள் அன்றாடம் காய்ச்சிகளாகவே உள்ளனர். வாகரையில் தற்போது கட்டப்படும் சுற்றயல் கூறுமருததுவமனை, அரச கட்டடங்கள், தேவாலயங்கள் கோயில்கள் மற்றும் மக்களின் வசிப்பிடங்கள் கொட்டில்களும், அரைகுறை கற்கட்டிடங்களும் ஆகும். அமைதிக்காலத்திலும் எதுவித விருத்தியும் இவர்களிடம் இல்லை.

மட்டக்களப்பில் முஸ்லிம்களைப் பொறுத்தவரை கடந்த 12 ஆண்டு கால போரில் படையினரால் தமிழர்கள் மட்டும் நசுக்கப்பட்டதால் அவர்கள் பொருளாதாரம், கல்வி என்பவற்றில் விருத்தி பெறும் வாய்ப்பு கிட்டியது. மேலும் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் பின்தங்கிய முஸ்லிம்களையும் விருத்திபெறச் செய்தனர். ஆனால் தமிழ்மக்களுக்கு அப்படி இல்லை.

வெறுமனே பேச்சளவில் கருத்துகளை கூறுவதை விட மட்டக்களப்பின் பின்னடைந்த மக்களை மேம்படுத்த அதிகாரிகள் முதன்மையாக திட்டமிட வேண்டும்.

அதிகாரிகளின் அதிகார இழுபறியே மக்களின் மேம்பாட்டு பக்கம் பார்க்காமைக்கு முக்கிய காரணமாகும். இனியாவது இந்த மக்களின் நலனில் சகலரும் குவிமையம் கொள்ளவேண்டும். ◆

## குளிர்பானத்தில் கரப்பான் பூச்சி நடிகர் விவேக் உட்பட ஐவர் மீது வழக்கு

குளிர்பானத்தில் கரப்பான்பூச்சி விவகாரம் தொடர்பாக நடிகர் விவேக் உட்பட ஐவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணிகள் சேதுராமன், கண்ணன் ஆகியோர் கடந்த 2 ஆம் திகதி புரைசைவாக்கம் பகுதியில் உள்ள விற்பனை நிலையத்தில் ஒரு குளிர் பானத்தை வாங்கி அருந்தினர்.

அப்போது அந்தக் குளிர்பானத்தில் அழுகிய நிலையில் கரப்பான்பூச்சி கிடந்த தைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். குளிர் பானத்தைக் குடித்த சட்டத்தரணி கண்ண னுக்கு தொண்டையில் எரிச்சல் ஏற்பட்டது. கடைக்காரரிடம் கேட்டதற்கு இது ஒரிஜினல் குளிர்பானம்தான் என்று கூறியதாகத் தெரி கிறது. இதனால் 3 போத்தல்களையும் விலை கொடுத்து வாங்கினர்.

பின்னர் எழும்பூர் மெட்ரோபாலிடன் 2 ஆவது நீதிமன்றில் சட்டத்தரணிகள் நேற்றுமுன்தினம் இது தொடர்பாக வழக்குத் தொடர்ந்தனர். குளிர்பான கம்பெனி அதிகாரி பிரகாஷ், புரசைவாக்கத்தில் ஏஜென்சி நடத்தும் கலைமணி, விஜயகுமார், குளிர்பான விளம்பரத்தில் நடித்த நடிகர் விவேக், மாநகராட்சி ஆணையாளர், சுகாதார அதிகாரி ஆகிய 5 பேர் மீது குற் றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## குருவைக் கொலை செய்த 5 சீடர்களுக்கு மரண தண்டனை

குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் வாழ்ந்தவர் சாமியார் ஹாடஹாரன் ஆனந்ஜி. சுவாமி ஸ்ரீநாராயணன், ஸ்ரீசரண்சுவாமி, ஜனா சியாம் சுவாமி, விஜய்பகத், மாதவ் பிரசாத் ஆகிய 5 பேரும் இந்தச் சீடர்களாவர்.

இவர்களற் கடந்த 1998 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி தங்கள் குருநாதருக்குக் கொடுத்த குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து கழுத்துநெரித்துக் கொன்றுள்ளார்கள்.

பின்னர் குருநாதரின் உடலை காரில் ராஜஸ தான் மாநிலத்திற்கு எடுத்துச் சென்று எரித்து விட்டனர். இந்தப் பயங்கரப் படுகொலை பற்றி குஜராத் நீதிமன்றில் மற்றொரு சாமியார் மனுத் தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த நீதிபதி இந்தக் கொலை பற்றி விசாரிக்க பொலிசுக்கு உத்தரவிட்டார். என றாலும் பொலிஸ் விசாரணையில் துப்புத் துலங் காததால் சி.பி.ஐ. பொலிஸார் துப்புத் துலக்கி னார்கள். சி.பி.ஐ பொலிஸ் விசாரணையில் குருவைக் கொலை செய்த சீடர்கள் ஸ்ரீநாராயணன், ஸ்ரீசரண் சுவாமி உட்பட 5 பேரும் கைது செய் யப்பட்டனர். அவர்கள் மீது அகமதாபாத் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை நீதிபதி எஸ்.ஏ.தவே விசாரித்து சீடர்கள் 5 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார்.

சிந்திக்க ஒரு நிமிடம்

## சுயகௌரவத்தை பாதுகாக்க பிள்ளைகளைக் கருவியாக்காதீர்

பெற்றோர் பிள்ளைகள் மீது அன்பு - பாசம் கொண்டிருப்பது தவறல்ல. ஆனால், அது பிள்ளைகளின் தனித்துவத்தை பாதிப்பதாக இருந்தால் தவறானதாகும்.

பெற்றோர் தாம் நிறைவேற்றாத ஆசைகளை பிள்ளைகள் மூலம் நிறைவேற்ற முயற்சிப்பதும், அவர்களிடம் அளவுக்கதிகமாக எதிர்பார்ப்பதும், தமது சுயகௌரத் தினை தக்க வைப்பதற்கும், அடுத்தவர் போல் தனது பிள்ளையும் வரவேண்டும் என நிர்ப்பந்திப்பதும் அபத்தமானது.

இவற்றை மட்டும் கருத்தில் கொண்டு பிள்ளைகள் மீது, அன்பு - பாசம் சொரியும் பெற்றோர் பாதகமான சூழலை ஏற்படுத்துகின்றார்கள்.

பெற்றோர் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்புக்களை வைத்திருப்பது நல்லது. ஆனால், அந்த எதிர்பார்ப்பு எத்தகையது என்பது தான் பிரச்சினை.

பிள்ளைகளின் தனித்துவங்களையும், ஆளுமைகளையும் வளர்க்கக் கூடிய எதிர்பார்ப்புக்கள் மிகச் சிறந்தது.

இவற்றை இனம் கண்டு, நிறைவேற்ற பிள்ளைகளிடம் அன்பாக உரையாடி கலந்தாலோசிக்க வேண்டும்.

பிள்ளைகளினால் முன்வைக்கின்ற இலக்குகளை, மீள்பார்வைக்குட்படுத்தி அவற்றை நிறைவேற்ற முடியுமா? அதற்கு பொருளாதாரம் தடையாக அமையுமா? வேறு என்ன தடைகள் வரும். என்றும், அதை நிறைவேற்ற என்ன வழிகளை அணுகலாம் என்றும் பிள்ளைகளுக்கு உரிய முறையில் எடுத்துச் சொல்லி வழிப்படுத்தவேண்டும்.

இவ்வாறு செயற்படாது பிள்ளைகள் மீது எதிர்பார்ப்புகளே முன்வைத்து, அப்பிள்ளைக்கு மன உழைச்சலை கொடுப்பது ஆரோக்கிய மற்றது. தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றாத பிள்ளைகள் மீது வெறுப்புக் கொண்டு புறந்தள்ளுவது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை.

கணித பாடத்தில் ஆர்வம் குறைந்த பிள்ளையிடம் நீ இஞ்சினியராகத்தான் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதும், அதைக் குறித்து அழுததம் கொடுப்பதும் அப்பிள்ளையை பாதிக்கும்.

மாறாக அப்பிள்ளை ஏனைய பாடங்களில் திறமையாக இருக்குமேயானால் அதற்கு பாராட டும், வரவேற்பும் கொடுக்க வேண்டும். பாடத் தெரிவுகளும் பிள்ளைகளின் தெரிவாகவே அமைய வேண்டும். இதற்கு பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களை அறிந்த கொள்வது மிகப் பிரதானமானது.

பிள்ளைகள் எதில் ஆர்வம் கொண்டிருக்கின்றார்களோ, அதில் இலகுவாக வெற்றி அடை கின்றார்கள்.

இன்றைய எமது சமூக புலத்தில் பெற்றோா பிள்ளைகளிடம் கலந்தாலோசித்து தீர்மானம் எடுப்பது குறைவு. தாம் எதை தீர்மானிக்கின்றார்களோ அதை பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டும் என நிர்ப்பந்தம் கொடுக்கப்படுகின்றது.

தமது சொற்படி கேட்கும் பிள்ளைகளுக்கு பரிசும் பொருட்களும், பாராட்டும் கொடுக்கப்படுகின்றது. மாறாக தமது சொல்லை மீறுபவர்களுக்கு அறகொட்டுதலும், புறம்தள்ளலும் இடம் பெறுகின்றது. இவை ஆரோக்கிய குடும்ப உறவை பாதிக்கும்.

பெற்றோர் சில, பல சந்தர்ப்பங்களில் நினைத்துக் கொள்வது தாம் நினைப்பதும், பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பதும், அதை நிறைவேற்ற கொடுக்கும் அழுத்தங்களும் சரியானது என்று.

ஆனால், இத்தகைய எண்ணங்கள் எந்தளவு தூரம் சரியானது என்பது கேள்விக்குறி? எப்போதும் பிள்ளைகளிடம் கலந்தாலோசிக்க வேண்டும். அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொள்ள வேண்டும். அவர்களின் ஆரோக்கிய இலக்குகளுக்கு கைகொடுத்து உதவி, பாராட்ட வேண்டும்.

இவ்வாறு செய்வதை விடுத்து, மற்ற பிள்ளைகள் எதை செய்கின்றார்கள். இதைச் செய்கின்றார்கள். அதனால் நீயும் இதைத் தான் செய்ய வேண்டும் என்று எண்ணி பிள்ளைகளிடம் அழுத்தம் கொடுப்பத தவறு.

பிள்ளைகளின் திறமை - சக்தி வித்தியாசம் கொண்டவை, எல்லோருக்கும் ஒரே விதமான திறமை - சக்தி இல்லை, இருக்கவும் முடியாது.

இதனால் பிள்ளையின் திறமையை கண்டு அவற்றை வளர்க்கப்படுத்துதல் வேண்டும். இல்லாவிட்டால் பிள்ளையின் சக்திகள் - திறமைகள் புதைக்கப்பட்டுவிடும். இறுதியாக எந்த துறையிலும் வளர்ச்சி பெறாத நபராகவே காணப்படுவர்.

ஆகவே, சுயகௌரவத்தினை பாதுகாப்பதறகாகவும், அடுத்தவருக்கு பகட்டை காட்டவும், நிறைவேற்றாத ஆசைகளை நிறைவேற்றவும் பிள்ளை கருவியாக பாவிக்காது. குறுகிய மனப்பான்மையுடன் அன்பு - பாசம் கொள்ளாது அவர்களின் முன்னேற்றத்தில் பங்கெடுப்போம். சிந்திப்போம். செயற்படுவோம்.

ஆக்கம்:
**யாழ்.ராதவல்லி**

# கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஈராக்கில் நேற்று சுட்டுக்கொலை

ஈராக்கின் கல்வி அமைச்சரகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்று பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கலாச்சாரப் பணிப்பாளரான கமால் - அல்- ஜரா என்பவரே தமது கடமைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தவேளை அவரது வாசஸ்தலத்தின் முன் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஈராக்கின் இடைக்கால அரசில் யார் உட்படுகின்றார்களோ அவர்களது உயிர்களுக்கு அச்சுறுத்தல் என்பதுடன் அவர்கள் அனைவரும் தாக்குதலுக்கு உட்படுவார்கள் என்பதனை ஆயுததாரிகள் இந்தத் தாக்குதல் மூலம் உணர்த்துகின்றார்களென பாக்தாத்திலுள்ள பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஈராக்கில் பிரதிவெளிவிவகார அமைச்சர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு மறுநாள் இவரது கொலை இடம்பெற்றது.



இதேவேளை, பாக்தாத்கில் உள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளின் தலைமையகப் பகுதியில் இருந்து பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

அத்துடன் திக்றிற் பகுதியிலும் நேற்று அதிகாலையில் இருந்து பாரிய புகை மண்டலம் மேல்லெழுந்த வண்ணம் இருந்தது. இந்தப் பகுதிகளில் என்ன நடந்தது என்பது எதுவும் வெளிவரவில்லை.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளின் தலைமையகம் அடிக்கடி முஸ்லிம் போராளிகளால் தாக்கப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளில் புகுந்த தீவிரவாதிகள் 150 மாணவர்களை கடத்திச் சென்றனர்

## நேபாளத்தில் சம்பவம்

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னராட்சியைக் கொண்டுவர வற்புறுத்தி மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளில் மட்டும் இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடந்த சண்டையில் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர்.

இந்த நிலையில் தீவிரவாதிகள் பாடசாலைகள் மீதும் தாக்குதல் நடத்திவருகிறார்கள். வடமேற்குப் பகுதியில் 4 பாடசாலைகளில் தீவிரவாதிகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீரெனப் புகுந்தனர்.

அங்கு படித்துக்கொண்டிருந்த 150 மாணவர்களை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர். ரசுவா என்ற பாடசாலையில் இருந்து மட்டும் 114 பேர் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்ட இந்த மாணவர்கள் 13 வயதிலிருந்து 19 வயதுக்குட்பட்டவர்கள். கடத்தப்பட்ட இந்த மாணவர்களை விடுவிக்க தீவிரவாதிகள் பணயத்தொகை விதித்தார்களா அல்லது வேறு நிபந்தனைகள் விதித்தார்களா என்பது பற்றி எந்தத் தகவலும் இல்லை.

கடத்தப்பட்ட இந்த மாணவர்களை உடனடியாக விடுதலைசெய்யும்படி மனித உரிமைக்குழு உறுப்பினர்கள் தீவிரவாதிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சவுதி தலைநகரில் வைத்து அமெரிக்க பிரஜை கடத்தல்

சவுதி தலைநகர் றியாட்டில் ஒரு அமெரிக்கரைக் கொன்றும், மற்றொருவரைத் தாம் கடத்தியும் வைத்துள்ளதாக அல்கொய்டா அமைப்பு இஸ்லாமிய இணையத்தளம் மூலம் அறிவித்துள்ளது.

குவன்ரனமோவிலும், அபுசாகிப் சிறைகளிலும் எமது சகோதரகள் அமெரிக்கப்படையினரால் எவ்வாறு நடத்தப்பட்டார்களோ அதேபோலவே நாமும் கடத்தி வைத்துள்ள அமெரிக்க நாட்டவரும் நடத்தப்படுவார் என அந்த இணையத்தளத்தில் அல்கொய்டா அமைப்பினர் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்கப் பிரஜை ஒருவர் சவுதியில் கொல்லப்பட்டதையும் அந்த இணையத்தளம் வீடியோப் பிரதி மூலம் ஒளிபரப்பியது.

இதேவேளை, நேற்று முன்தினம் மற்றுமொரு அமெரிக்க நாட்டவர் றியாட்டில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதல் சம்பவம் அல் - மலாஷ் நகரத்தில் இடம்பெற்றது.

சவுதியில் அமெரிக்கப் பிரஜை காணாமற்போனதை அமெரிக்கத் தூதரகமும் உறுதிசெயதுள்ளது. காணாமற்போன அமெரிக்கர் தொடர்பான தகவலை நாம் வைத்துள்ளோம். இந்தத் தகவல் மூலம் காணாமற்போனவரை உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என அமெரிக்கத்தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொல்லப்பட்ட அமெரிக்க நாட்டவர் கென்னத் ஸ்குறூக்ஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதல்கள் மூலம் சவுதியில் உள்ள அமெரிக்கர்கள் வெளியேற வேண்டும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# சேர்பிய ஜனாதிபதி தேர்தல் நேற்று நடைபெற்றுள்ளது

சேர்பியாவில் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்களிப்பு நேற்று நடைபெற்றது.

சேர்பியாவில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கு கடந்த பதினெட்டு மாதங்களில் நான்காவது முறையாக நடைபெறும் தேர்தல் இதுவாகும். கடந்தகாலங்களில் மக்கள் பெருமளவில் வாக்களிக்கத் தவறியமையே இந்தத் தேர்தலுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இருந்தபோதிலும் இந்த முறை நடைபெறும் தேர்தல் முன்னைய தேர்தலைவிட சிறப்பாக இருக்கும் எனவும் இதில் வெற்றிபெறும் வேட்பாளர் நிச்சயிக்கப்பட்ட பெரும்பான்மையைப் பெறுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடந்த முதல் சுற்றுத் தேர்தலின் பின் எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுவாக்கெடுப்பில் ரொமிஸ்லோவ் நிகொலிக் தேர்ந்தெடுக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.




# உல்லாசப் பிரயாணிகள் தங்கியிருந்த ஹோட்டல் மீது கிரனைட் தாக்குதல்

## நால்வர் பலி, 22 பேர் காயம்

இந்தியாவின் ஆளுகைக்குட்பட்ட காஷ்மீரில் உல்லாசப் பயணிகள் தங்கியிருந்த ஹோட்டல்மீது காஷ்மீர் போராளிக் குழுவொன்று நடத்திய தாக்குதலில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 22 பேர்படுகாயமடைந்தனர்.



சிறிநகரில் அமைந்துள்ள இந்தக் ஹோட்டலில் பெருமளவு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் தங்கியிருந்த வேளையில் ஹோட்டலுக்குள் கிரனைட் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவில் அறியப்படாத அல்நசிறின் என்ற முஸ்லிம் அமைப்பு இந்தத் தாக்குதலுக்கு உரிமைகோரியுள்ளது. காஷ்மீர் தனியான நிலப்பகுதி என்பதனை உணர்த்தும் வகையிலேயே இந்த எச்சரிக்கைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்தத் தாக்குதலை நடத்திய அமைப்பின் உறுப்பினர் பி.பி.சிக்கு தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட நால்வரில் இருவர் உல்லாசாப் பிரயாணிகளாவர். இதில் ஆறுவயதுப் பெண் குழந்தையும் அடங்கும். மற்றைய இருவரும் ஹோட்டல் ஊழியர்கள்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாமென பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை, காஷ்மீரின் எல்லைப் பகுதியான காந்வர்வாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிரனைட் தாக்குதலில் 20 பேர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதல் படையினரின் காவலரணுக்கு அருகில் நடத்தப்பட்டுள்ளது.

# ஆப்கானில் நடந்த தாக்குதலில் ஆயுததாரிகள் எண்பது பேர் பலி

## அமெரிக்க இராணுவம் அறிவிப்பு



தலிபான் போராளிகளின் கோட்டை எனக் கருதப்படும் ஆப்கானின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் குறைந்தது 80 போராளிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட எண்பது பேரும் தலிபான், அல் கொய்டா அல்லது கெஸ்ப் - இ - இஸ்லாம் அமைப்புக்களின் உறுப்பினர்களாக இருக்குமெனவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அல்கொய்டா அமைப்பின் முகாம்கள் என சந்தேகிக்கப்படுபவற்றை பாகிஸ்தான் இராணுவம் மூடியுள்ளது.

ஆப்கானிஸ்தான் வசிறிஸ்தான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு ஆட்லெறிகள், ஜெட் சண்டை விமானங்கள் மற்றும் ஹெலிகொப்ரர்களும் பயன்படுத்தப்பட்டன.

இதேவேளை, கடந்தவாரம் பல அமெரிக்கப் படையினர் தாம் வைத்த கண்ணிவெடிகளில் சிக்கி உயிரிழந்ததாக தலிபான் தெரிவித்தது.

ஆனால், இந்தவாரம் ஒரு ஆப்கான் படைவீரரும், இரண்டு அமெரிக்கப் படையினருமே காயமடைந்ததாக அமெரிக்கா தெரிவித்தது.

# ஐரோப்பிய நாடாளுமன்றுக்கான வாக்காளிப்பு நேற்று நடந்தது



ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கான இறுதிக்கட்ட வாக்களிப்புக்கள் நேற்று நடைபெற்றது.

நேற்று நடந்த இரணடாம் நாள் வாக்கெடுப்பில் இத்தாலி, மோல்ரா, லத்வியா, கிறீன்குடியரசு, அயர்லாந்து, பிரிடடன் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் ஏற்கனவே தமது வாக்குகளை அளித்துள்ளன.

250 நாடுகளைச் சேர்ந்த 350 மில்லியன் வாக்காளர்கள் 732 ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக வாக்களிக்கின்றனர்.

# சீனாவில் பாலமொன்று திடீரென இடிந்து விழுந்தது

சீனாவின் லியானிங் மாகாணத்தில் பாஞ்சின் நகரில் உள்ள ஆற்றுப்பாலம் திடீரென இடிந்து விழுந்துவிட்டது. தினமும் ஆயிரக் கணக்கான வாகனங்கள் செல்லும் பாலம் இது. பாலம் இடிந்தபோது அதில் சென்று கொண்டிருந்த வாகனங்களும் ஆற்றில் விழுந்தன. 30 கார்கள் மூழ்கிவிட்டன.

பலத்த மழையேதும் பெய்யாத நிலையில், கட்டி ஒருசில ஆண்டுகளே ஆகியுள்ள நிலையில் இந்தப் பாலம் இடிந்து வீழ்ந்திருக்கிறது. பாலம் கட்டுவதில் முறைகேடு நடந்ததா என்பது குறித்து விசாரணை நடந்துவருகிறது! இடிந்த பாலத்தின் ஒரு பகுதியில் மயிரிழையில் தப்பிப்பிழைத்த ஒரு வாகனம் இடிந்த பாலத்தின் மீது நிற்கும் காட்சி.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அடுத்த மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தின்போது பெரும்பான்மையை நிரூபிப்போம்!

## அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் அடுத்த மாதம் இருபதாம் திகதி கூடும்போது - பலமான அரசு என்பதற்குத் தேவையான பெரும்பான்மையை காண்பிப்பதற்குத் தயாராக இருப்பதாக, தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சரும், பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார்.

அரசின் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் நடத்திவருகிறது.

நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தொடர் ஆரம்பமாகும்போது - அரசாங்கத்தின் அமைச்சர் குழுவும் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நடைபெற்ற மூன்று நாடாளுமன்றக் கூட்டத்திலும் அரசாங்கம் தனது பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனது.

அத்துடன் கடைசியாக நடைபெற்ற நாடாளுமன்ற அமளி, துமளிக்குப் பின்னர் எதிர்க்கட்சிகளில் 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு அரசிற்கெதிரான நடவடிக்கைகளில் ஓரணியில் திரண்டுள்ள நிலையில் அமைச்சர் ஜெயரத்ன மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

# யாழ்.குடாவுக்கு நீர்மின்சாரம் வழங்க கண்ணிகளை அகற்றி உதவுமாறு கோரிக்கை!

(யாழ்ப்பாணம)

வவுனியாவிலிருந்து சுன்னாகம் வரை மீண்டும் உயர்வலு நீர் மின்சார விநியோகத்தை மேற்கொள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள வெடிபொருட்களை அகற்றி உறுதிப்படுத்துமாறு, இலங்கை மின்சார சபையால் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் நிதியுதவியுடன் யாழ்பாணத்திற்கு 1 லட்சத்து 33 ஆயிரம் வோல்ட் நீர் மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்கு - முன்னர் மின் கோபுரங்கள், மின்வலு காவு நிலையங்கள் இருந்த பகுதிகளை வெடி பொருளற்ற பிரதேசமாக்கி அதனை உறுதிப்படுததுமாறு மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து அவர்கள் மின் கோபுரங்கள், மின்வலு காவு நிலையங்களை தேடும் பணியில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இந்த வேலைத்திட்டம் 2006 ஆண்டுக்கு முன்னர் முடிவடைய வேண்டும என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் குடும்பஸ்தர் கழுத்து வெட்டிக் கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - சந்திவெளி ஜின்னா ஹோட்டல் வீதியில் கழுத்து வெட்டிக் கொலைசெய்யப்பட்ட நிலையில் ஆணின் சடலமொன்று நேற்றுக காலை கண்டுபிடிக்கப்பட்டது

கொலைசெய்யப்பட்டவர் சா.அருளாணந்தம் (வயது 43) எனத் தெரியவருகிறது. இவரை நேற்றுமுன்தினம் இனந்தெரியாத இருவர் வீட்டிலிருந்து அழைத்துச் சென்றதாகவும் நேற்றுக்காலை மரணமான நிலையிலேயே மீண்டும் கண்டதாகவும் அவரது மனைவி தெரிவித்தார்.

இவரது கொலைக்கு தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களே காரணம் எனத் தெரியவருகிறது.

இவரது உடல் கிடந்த இடத்திற்கு விஜயம் செய்த மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் அஜ்மீர், அவரது உடலைப் பிரேத பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இவரது உடல் தற்போது பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

## புதிய காப்புறுதித் திட்டம் விரைவில் அமுலாகும்!

இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் நன்மையடையக்கூடிய வகையில் புதிய காப்புறுதித் திட்டமொன்றை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிமுகப்படுத்தவுள்ளார்.

இதன்படி நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளும் நாளொன்றுக்கு ஒரு ரூபா செலுத்தி, இந்தக் காப்புறுதித் திட்டம் மூலம் பாரதூரமான நோய்களுக்கு வைத்திய வசதிகளைப் பெறலாம்.

அப்பலோ மருத்துவமனையின் தலைவரை சந்தித்தபோதே மேற்படி திட்டம் குறித்து பிரதமர் தீர்க்கமாக கலந்துரையாடியதாக தெரிவிக்கப் படுகிறது.

இதன்படி ஒரு நாளைக்கு ஒரு ரூபா வீதம் செலுத்தி காப்புறுதித் திட்டத்தில் அங்கத்துவம் பெறும் பிரஜை ஒருவருக்கு இருதய நோய், சிறுநீரகநோய், மூளையில் சத்திர சிகிச்சை போன்ற பார்தூரமான நோய்களுக்கு அப்பலோ மருத்துவமனை மூலம் வைத்திய வசதிகளை வழங்கவும் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

# மகாநாயக்கரின் பூதவுடல் அரச மரியாதையுடன் தகனம்

(கண்டி)

அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த அதி வண. ரம்புக்வெல சிறி விபசி தேரரின் இறுதிக்கிரியைகள் நேற்று மாலை கண்டி பொலிஸ் மைதானத்தில் பூரண அரச மரியாதையுடன் நடைபெற்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல அஸ்கிரிய மகா விகாரையில் மகாநாயக்கரின் வதிவிடத்தில் வைக்கப் பட்டிருந்த பூதவுடலுக்கு நேற்று நண்பகல் 12 மணிவரை மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இறுதி நாளான நேற்று ஆயிரக் கணக்கான மக்கள் தேரரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இறுதிச்சடங்கில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டார, புத்த சாசன அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட பல அரசியல் பிரமுகர்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும், மதகுருமார்களும் கலந்துகொண்டனர்.

சிறி விபசி தேரரின் பூதவுடலுககு இறுதிக்கிரியைகள், மதரீதியான அனுஷ்டானங்கள் நிறைவு பெற்றதும், கண்டி பொலிஸ் மைதானத்தில் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தின் பின்னர், பூதவுடல் தாங்கிய சிதைக்கு தீ மூட்டப் பட்டது.

### மின்சாரம்...

கம்பிகளைப் பிடித்ததால் மின் தாக்கத்திற்கு உள்ளாகித் தூக்கி வீசப்பட்டார். வேகமாக வீழ்ந்ததால், உடலில் காயமேற்பட்டதாலும், மின்சாரம் தாக்கியதாலும் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப் பட்டபோதும் அவரைக் காப்பாற்ற முடியாதுபோய்விட்டதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரது உடல் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ப)

### எதிர்ப்புப்...

றனர்.

தனது கட்சி மற்றும் நாடாளுமன்ற நிலைகளில் இருந்து இந்த எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாத நிலையிலேயே தேசப்பற்று தேசிய முன்னணி என்ற பெயரில் இவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளனர்.

# மத்திய வங்கிக்கு நியமித்த வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு மாதாந்தம் 53 லட்சம் சம்பளம்!

உலக வங்கியின் ஆலோசனைகளுக்கமைய கடந்த காலங்களில் இலங்கையின் மத்திய வங்கிக்கு நியமிக்கப்பட்ட நிதியுடன் தொடர்புடைய வெளிநாட்டு ஆலோசகர்கள் இருவருக்கு மாதாந்தம் 53 இலட்சம் ஊதியமாக வழங்கப்பட்டதாக மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதில் வங்கியின் நிதியுடன்கூடிய ஆலோசகர் பதவி வகித்தவருக்கு 30 இலட்சம் ரூபாவும், மனிதவள அபிவிருத்தி தொடர்பான ஆலோசகருக்கு மாதாந்தம் 23 இலட்சம் ரூபாவும் ஊதியம் வழங்கப்பட்டதுடன் இருவரும் 2 வருட ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### புலிகளின்...

அவர்கள் புதிய கடற்பயணத் திட்டத்தை முன்வைக்கலாம் எனவும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகள் மீதான...

தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் தமிழீழத்தை அடைய வேண்டும் என்ற கொள்கை, தமிழகத்திலுள்ள புலி ஆதரவாளர்களின் இலக்காகவே உள்ளது. இந்த அமைப்புகள் அதன் நோக்கத்திற்காக மேலும் தீவிரப்படுத்த முனையும். இதனால் பதற்றமான சூழ்நிலை உருவாகும். இந்நிலையில் விடுதலைப் புலிகளை இந்தியாவில் தாராளமாகச் செயற்பட அனுமதித்தால் அது இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் குந்தகத்தை ஏற்படுத்தும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் கட்டுக்கோப்பான அமைப்பாக உள்ளது. இதற்கு தென்னிந்தியாவில் - தமிழகத்தின் சில பகுதிகளில் வலுவான தொடர்பு இருக்கிறது.

இலங்கைக்கு மருந்து, பெற்றோல் டீசல், போன்ற இன்றியமையாத பொருட்கள் கள்ளத்தன மாகக் கடத்தப்படுவதற்கு தமிழகம் அடித்தளமாகப் பயன்படுத்தப்படுகிறது. இலங்கைத் தமிழருக்கும் இலங்கையில் உள்ள இந்தியத் தமிழருக்குமிடையே மொழி, கலாசாரம் உள்ளிட்ட பல வழிகளில் ஒற்றுமை நிலவுகிறது. தனிநாட்டுக் கோரிக்கையால் ஏற்படுகின்ற இனக்கலவரம் இலங்கையில் தொடரும் நிலையில் அதன் விளைவு தமிழகத்தில் எதிரொலிக்கும்.

தமிழகத்தில் ஆதரவைப் பெருக்கும் வகையில் பிரிவினைவாத சண்டையைத் தூண்டிவிட வலுவான அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்து இருக்கும். இதனால் புலிகளைத் தொடர்ந்து கட்டுப்படுத்துவது அவசியம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பவர்களை ஒடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை குற்றம் கூறி வருகின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவந்து விசாரிக்க தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது இந்திய, இலங்கை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிடையே கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியது. இதனால் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வது அவசியமாகின்றது. அறிவிப்பு வெளியிட்ட நாளிலிருந்து (மே14) மறுஉத்தரவு வெளியாகும்வரை தடை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை சகல பொலிஸ் நிலையங்களிலும் பொதுமக்களின் பார்வையிடும் பொருட்டு ஒட்டி வைக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

IIS இன் அதிரடி கட்டணச் சலுகை

Diploma in Information Technology

காலம் : 3 மாதம்

2,500/= மட்டுமே

பதிவுக்கட்டணம் அறவிடப்பட மாட்டாது

இப்பிரிவுக்கு மட்டுமே இக் கட்டணச்சலுகை வழங்கப்படும்.



ஆரம்பம் :

19 / 06 / 2004 பகல் 10.00 மணி

அதிக மாணவர்களின் ஆசை கணனிக் கல்வியைக் கற்க IIS இல் இணைய வேண்டும் என்பதே.

பெற்றோர்கள், கல்வியாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க, எமது நிர்வாகம் பெற்றோர்களின் பொருளாதார வசதிகளைக்கருத்தில் கொண்டு மிகக்குறைந்த கட்டணத்தில் மேற்படி கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

மிகச்சிறந்த ஓர் அடிப்படைக் கணனிக் கல்வியைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் ஆராய்ந்து சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நெறியாகும்.

A/L பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களே !

பரீட்சை முடிவுகள் வெளியாகவுள்ள உங்கள் பொன்னான காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு IIS உடன் இணைந்து கொள்ளுங்கள்

19.06.2004 இல் ஆரம்பிக்கப்பட இருக்கும் எமது 3 வது பிரிவுடன் மாணவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.

இம்மாதம் [illegible], ஆரம்பிக்கப்பட இருக்கின்ற டிப்ளோமா கற்கை நெறிகளிற்கு பதிவு செய்துள்ள, பதிவு செய்யவுள்ள மாணவர்களுக்கு மேற்படி கற்கை நெறியினை எவ்வித கட்டணமுமின்றி முற்றிலும் இலவசமாக கற்க முடியும் .

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )

" An Edexcel Approved Training Centre "

Head Office:
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk

Branch:
IIS, Nelliyady, Karaveddy
T.P No: 021-226 3335

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.